பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 02 வெள்ளிக்கிழமை 15.03.2024 கதிர் 129

# முதலில் நாடாளுமன்ற தேர்தல் அதுவே பஸிலின் எதிர்பார்ப்பு

## அதிகார மாற்றம் சுமுகமாக நடக்கும் வழி என்கிறார்

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்தேர்தலைநடத்துவதே சிறந்தது என்று முன்னாள் நிதி அமைச்சரும்பொதுஜனபெரமுனவின் ஸ்தாபகருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.அப்போதுதான்அதிகாரப் பரிமாற்றம்சீரியதாகஇருக்கும்என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு நேற்று வழங்கியநேர்காணலில்அவர்இதனைத் தெரிவித்தார்.

நாடாவியரீதியில்அமைப்புரீதியான வலையமைப்புக்கள் உள்ள பிரதான இரண்டு கட்சிகள் உள்ளதாக நான் கருதுகின்றேன். அந்த வகையில் சிறீ லங்கா பொது ஜன பெரமுன எனப்படும் எமது மொட்டுக்கட்சியும், மக்கள்விடுதலைமுன்னணியும்தான் அவ்விதமான வலையமைப்பைக் கொண்டுள்ளன.

அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்துப் பார்க்கின்றபோது, மக்கள் பலமுள்ள கட்சியாக இருப்பது எமது பொது ☞ 2

## இனிது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றத் தேர்தலா ஜனாதிபதித் தேர்தலா முதலில் என்கிறகுழப்பம்மீண்டும். பஸில்நாடு திரும்பியதும்ரணில்மொட்டுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரா இல்லையா என்பது தெளிவாகிவிடும் என்று பார்த்தால் பஸிலோ நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்லலாம் என்கிறார். இதுவரை கட்சிக்குள் அரசல் புரசலாக இருந்து வந்த இந்த விவகாரத்தை இப்போது பஸில் ஊடகங்களிலும் போட்டு உடைத்துவிட்டார்.

நாடாளுமன்றத்தேர்தலைநடத்தி மொட்டுக்கட்சிக்குஇருக்கும்ஆதரவை அளந்து பார்த்துவிட்டால், ஜனாதிபதித் தேர்தலில்ரணிலுக்குதேவையில்லாம் முட்டுக்கொடுத்துஇருக்கும்பெயரையும் கெடுத்துக்கொள்ள வேண்டாம் என்பது பஸின் திட்டம் என்கிறார்கள் கொழும்பில்எனக்குத்தெரிந்தமூ-த்த பத்திரிகையாளர்கள்.

ரணிலோ நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதில் விருப்பத்தோடு இல்லை. காரணம் அதில் ஒருவேளை சஜித் தரப்பு ☞ 2

## 5 இளைஞர்களுக்கு விளக்கமறியல்

வீதியில் பயணித்த இளைஞனை வழிமறித்து தாக்கிய குற்றச்சாட்டில் கைதான5இளைஞர்களையும்எதிர்வரும் 26ஆம்திகதிவரையில்விளக்கமறியலில் வைக்குமாறு , யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய்பொலிஸ்பிரிவுக்குஉட்பட்ட பகுதியில் வீதியில் பயணித்த தன்னை வழிமறித்து இளைஞர் குழு ஒன்று தாக்குதல் நடத்தியதாக , தாக்குதலுக்கு இலக்கானஇளைஞன்கோப்பாய்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , ஐந்து இளைஞர்களை கைது ☞ 8

## உண்ணாவிரதம் இருப்போர் உடல்நிலை மோசமடைகிறது

### கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா சிறைச் சாலையில் உண்ணா விரதம் இருந்துவரும் வெடுக்குநாறிமலைஆதி சிவன் ஆலய பூ-சகர் உள்ளிட்ட 5 பேரும் 3 ஆவதுநாளாகஉண்ணா விரதம் இருக்கிறார்கள். பொய்யான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது அவர்களது கோரிக்கை. அவர்களது உடல்நிலைமோசமடைகின்றது.

என்று தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்றஉறுப்பினர் செல்வராஜாகஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா சிறைச் சாலையில் உண்ணா விரதம்இருக்கும்வெடுக் குநாறி மலை ஆலய பூசகர் உள்ளிட்ட கைதிகளை ☞ 2

## கறுவா விளைச்சலில் நாம் கவனம் செலுத்தவேண்டும்

### ஜனாதிபதி அழைப்பு

கறுவாவிளைச்சலில் நாம் கவனம் செலுத்த வேண்டும். தேயிலை பயிருக்குபொருத்தமான இடங்களில் தேயிலை பயிரிடுவதன் மூலமும், ஏனையஇடங்களில்கறுவா பயிரிடுவதன் மூலமும் அதிகவருமானத்தைஈட்ட முடியும்என்றுஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

காலி, ஹோலுவா கொட 'செரின் ரிவர் பார்க்' சூழலியல் பூங்காவை நேற்று பிற்பகல் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கும்நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் ஒரு பொருளாதாரமேம்பாட்டுத் திட்டமாகும். நாம் இதுபோன்றதிட்டங்களில் கவனம்செலுத்த வேண்டும். இன்றுகாலிமுக்கிய சுற்றுலாத் தலமாக மாறியுள்ளது. அதை நாம் மேலும் மேம்படுத்த வேண்டும். இதன்மூலம் இப்பகுதிமக்கள்பெருமளவு வருமானம்பெறமுடியும்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் அதே வேளையில் சுற்றுச் சூழலையும் ☞ 2

## கறுவா செய்கையை மேம்படுத்த தனித் திணைக்களம் உருவாகும்

### ஜனாதிபதி பணிப்புரை

கறுவாச்செய்கையை மேம்படுத்துவதாக வழங்கிய வாக்குறுதிக்கு அமைய, அதற்கான தனியான திணைக் களத்தைஉருவாக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என்று பெருந்தோட்ட கைத் தொழில்மற்றும்விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர:

காலி, ஹோலுவாகொட 'செரின் ரிவர் பார்க்' சூழலியல் பூங்காவை நேற்று பிற்பகல் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கும்நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன காலி நகரத் திற்கும்கல்வித்துறைக்கும் அளப்பரிய சேவையாற்றினார். அந்தசேவையை அமைச்சர் ரமேஷ் பத்திரன தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் முன்னெடுத்து ☞ 2

## சீனாவின் சிறப்பு வெடிகுண்டுகளை செயலிழக்கச் செய்யக் கருவிகள்

### இலங்கை இராணுவத்திற்கு

சீன இராணுவ மானியத் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சுக்கு அன்பளிப்பாக வழங்கப் பட்ட விசேட வெடிபொருட் களை அகற்றும் உபகரணங்களை இலங்கைக்கு சீனா அன்பளிப்பாக வழங்கியுள்ளது. சீன மக்கள் குடியரசின் தூதுவர் கியூ சென்கொங்கிடிருந்து இந்த உபகணங்களை இராணுவத் தலைமையகத்தின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல்கமல்குணரத்ன மற்றும்இராணுவத் ☞ 8

## நிர்மாணத்துறையின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக தனிக் குழு நியமனம்

நிர்மாணத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை உரிய முறையில் ஆராய்ந்துதற்போதைய பொருளாதார நிலைமையில் அப்பிரச்சினைகளுக்கு வழங்கக்கூடிய தீர்வுகளைக்கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்க நிபுணர் குழுவொன்றை நியமிக்க இருப்பதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நிர்மாணத்துறையில் உள்ள ☞ 2

## மலையகத் தொழிலாளர்களுக்கு ஒரு மாதத்துக்குள் சம்பளஉயர்வு

### அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு

மலையக பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1700 ரூபா வழங்க முடியுமெனவும் எதிர் வரும் 30 நாட்களுக்குள் சம்பள உயர்வு கிடைக்குமெனவும் அமைச்சர்ஜீவன்தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், மலையக தமிழர்கள் தமது தேசிய அடையாளத்தை சனத்தொகை கணக் கெடுப்பின் போது மலையகத் தமிழர்என வெளிப்படுத்துவதற்கான ஏற்பாட்டை ☞ 8

## வடக்கின் அபிவிருத்திக்கு நிதி வழங்க சீனா, இந்தியா, ஜப்பான் பெரும் ஆர்வம்

### பயன்படுத்த வேண்டும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

வடபகுதியின் பல் வேறுஅபிவிருத்திநடவடிக் கைகள்மற்றும்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பல மில்லியன் நிதியை வழங்க சீனா, இந்தியா, மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முன்வந்துள்ளதாக தெரிவித்துள்ளஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிடைக்கப்பெறும்சந்தர்ப்பத்தை சரியானதாக பயன்படுத்திக்கொள்வது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்ததாவது:

பெரும்பொருளாதார நெருக்கடியை நாடு சந்தித்திருந்தாலும் தற்போதுள்ள அரசின் சரியான அரசியல் வழிநடத்தல்காரணமாக அந்த நிலையிலிருந்து நாடு தற்போது மீண்டு வருகின்ற நிலையில் வடக்கின்அபிவிருத்திக்கு இன்றைய அரசு அதிகளவான முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது..

அதன்அடிப்படையில் வெளிநாடுகளுடன் நாம் குறித்த நாடுகளுடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள இராஜதந்திர நடவடிக்கைகளின் பயனாக வடக்கின் அபிவிருத்திக்காக சீனா 1500 மில்லியன் நிதியை வழங்கமுன்வந்துள்ளது.

குறித்த 1500 மில்லியனில் வீட்டுத் திட்டத்துக்காக 500 மில்லியனும், மக்களுக்கு அரிசி ☞ 2

### சபாநாயகருக்கு எதிரான

## நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது மார்ச் 19, 20 இருநாள்கள் விவாதம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மார்ச் 19 மற்றும் 20 ஆகிய தினங்களில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள சபாநாயகர் தலைமையில் நேற்று கூடியநாடாளுமன்றஅலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் ☞ 8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

முன்னிலை பெற்றுவிட்டால் அதன் பிரதிபலிப்புஜனாதிபதித் தேர்தலிலும் இருக்கும். அதனால்சஜித்தின்வெற்றி வாய்ப்பு அதிகமாகிவிடக்கூடும் என்கிற அச்சம். எனவே ஜனாதிபதித் தேர்தல்தான்முதலில்நடக்கவேண்டும் என்பதுதான் ரணிலின் நிலைப்பாடு.

ரணிலுக்கும் மகிந்தவுக்கும் இடையில் அண்மையில் நடந்த சந்திப்பின்போதும்இதுதொடர்பில்ஒரு இணக்கமானமுடிவுக்குவரமுடியாமல் போனதால்தான் பஸில் அவசர அவசரமாகஅழைக்கப்பட்டிருக்கின்றார் என்றும்மொட்டுக்கட்சிவட்டாரங்கள் கூறுகின்றன. இந்தவிடயத்தில்ரணில் விரைவில் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். நீண்ட நாட்களுக்கு இழுத்தடிக்க முடியாது.

இந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்துக்குள்ஜனாதிபதித் தேர்தலை வைத்தாக வேண்டும். அதை ஒத்தி வைப்பதற்கு ஏதாவது திருகுதாள வேலையை ரணில் பார்த்தால் தவிர தேர்தலை ஒக்டோபர் இறுதிக்கு முன்னர் நடத்தியே ஆகவேண்டும். நாடாளுமன்றத்தை ஒகஸ்ட் மாதம் 5க்குப் பின்னரே கலைக்க முடியும். அப்படியானால் மூன்று மாதங்களுக்குள்இருதேர்தல்களையும் நடத்தி முடிக்கவேண்டும்.

அப்படிநெருக்கமாகத்தேர்தல்களை நடத்தினால் ஒன்றின் தாக்கம் மற்றொன்றில் அதீதமாக இருக்கும் என்பதுதான் ரணிலுக்கு உள்ள அச்சம். நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கி தேசியக் கட்சி தேறுவதற்கான வாய்ப்புக்களே இல்லாத நிலையில் ரணில்நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்வது சாத்தியமில்லை என்றும்,

நாடாளுமன்றத் தேர்தலில் எப்படியும் தமக்கிருக்கும் அடிமட்ட ஆதரவு மூலம் கணிசமான ஆசனங்களைப் பெற்றுக்கொண்டு எதிர்த்தரப்பில்போய்அமர்ந்துவிட்டால் ரணிலைத்தமதுதோள்களில்சுமந்து திரியவேண்டிய தேவை இல்லை என்றும்பஸில்கணக்குப்போடுகின்றார் என்றும் அரசியல் அவதானிகள் கருத்துக் கூறுகின்றார்கள்.

எதுவாக இருந்தாலும் இன்னும் ஒரு நான்கரை மாதங்களுக்குள் எல்லாம் தெரிந்துவிடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## முதலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜன பெரமுனவும், ஐக்கிய மக்கள் சக்தியாகும்.

அந்த வகையில் எமது பெரமுனவுக்கே அமைப்பு ரீதியான வலையமைப்பும், மக்கள் பலமும் காணப்படுகின்றன. இந்த விடயங்களுக்குஅப்பால்மூன்றாவதாக நாட்டினை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய தலைமைத்துவம் அவசியமாகின்றது.

நாம் அமைப்பு ரீதியிலான வலையமைப்பையும், மக்கள் ஆணையையும்கொண்டிருந்தபோதும் முன்னோக்கிக் கொண்டு செல்வதில் தலைமைத்துவ பின்னடைவுகள் இருந்தன.ஆனால்மக்கள்ஆணையும், அமைப்புரீதியானவலையமைப்பும் இல்லாதஐக்கியதேசியக்கட்சியிடத்தில் நாட்டை முன்னகர்ததக்கூடிய தலைமைத்துவம் உள்ளது.

விசேடமாககூறுவதாகஇருந்தால் நெருக்கடியான நிலைமையில் தலைமைத்துவத்தினை ஏற்று எதிர்காலத்திலும்நாட்டைமுன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார். இந்த யார்த்தத்தினைப் புரிந்தகொள்ளவேண்டும்.

தற்போதைய சூழலில் மேற்படி மூன்று சக்திகளையும் தனித்தனியாக கொண்டிருக்கின்ற தரப்பினரையும் இணைப்பதுதான் எனது நோக்கமாக உள்ளது. எம்மைப் பொறுத்தவரையில் எமது பதவிகளையும்,எமதுவெற்றிகளையும் நாம் தியாகம் செய்துள்ளோம். ஆகவே எமது பதவிநிலைகள், வெற்றிகள் என்பனவற்றுக்குஅப்பால் மேற்படி மூன்று விடயங்களையும் ஒருங்கிணைப்பதுதான் எனது வேலையாகஉள்ளது.அந்தப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டதா இல்லையா என்பதை வெளிப்படையாகக் கூற முடியாது.

திருணம பொருத்தங்கள் பார்க்கப்படுகின்றபோதுஅங்கேமுகவர் ஒருவர்தேவைப்படுகின்றார்.அவ்வாறு இந்த விடயத்திற்கும் முகவர் ஒருவர் அவசியமாகஉள்ளார்.தற்போதுஅவர் இருக்கின்றாரா இல்லையா என்பது எனக்கு தெரியாது. ஆனால் முகவர் ஒருவர் தேவையாக உள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் இருவர் அல்லது மூவருக்கு இடையில் போட்டிகள்ஏற்படும்.இதில்நால்வர்ஐவர் இருந்தால்கூடஒருவாக்கினையேனும் அதிகமாகப்பெற்றுக்கொள்பவர்தான் வெற்றி பெறுவார். அதாவது 51சதவீதமான வாக்குகளைப் பெறவேண்டும்.

ஆனால்நாடாளுமன்றத்தேர்தல் அவ்வாறானதல்ல. 112 ஆசனங்கள் காணப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. 113 ஆசனங்கள் காணப்படாத நிலையிலும் ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே அதுபற்றியஅச்சங்கள்தேவையில்லை.

எனது கருத்து, ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் பொதுத் தேர்தலைநடத்தினால்வரலாற்றுக்கு அமைவாக அது மக்களின் யதார்த்தத்தினைப் பிரதிபலிக்காது. காரணம், ஜனாதிபதித் தேர்தலில்ஒரு வாக்கினால் வெற்றிபெறும் கட்சிக்கு எல்லையற்றஅதிகாரம்கிடைக்கலாம்.

அந்தநிலைமையானதுநாட்டின் எதிர்காலத்துக்குச் சிறந்ததல்ல என்றே கருதுகின்றேன். ஆகவே நாடாளுமன்றத்தேர்தலுக்குப்பின்னர் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றால் சீரான அதிகாரம் உருவாக்கும்.

மேலும் நாம் தேர்தலை பிற்போடுவதற்குத்தயாராக இல்லை. தேசிய தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்படவேண்டும் என்பதில் நானும், எமது கட்சியும் உறுதியாக உள்ளோம்.

அதேநேரம், கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் கொரோனா உள்ளிட்டநிலைமைகளால்தேர்தலை பிற்போடும் நிலைமை உருவானது. அதன்பின்னர்தேர்தல்நடத்தப்பட்டபோது எல்லையற்ற அதிகாரத்தினை நாம் பெற்றுக்கொண்டோம்.

விகிதார முறைமைஉருவாக்கப் பட்டுள்ளதால், பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால்யாரும்முழுமையாக கழுவிச் செல்லப்பட மாட்டார்கள். ஆகவே அதுபற்றி அச்சம் கொள்ளத் தேவையில்லை.

மேலும், தற்போதுள்ள ஆளும் தரப்பு எம்முடையதுதான் என்று பலர்கூறுகின்றார்கள். நான்அதனை இயக்குவதாகவும் கூறுகின்றார்கள். உண்மையில்தற்போதைய ஆளும் தரப்பு எம்முடையதுதானா என்பது தொடர்பில் எமக்கு சந்தேகங்கள் பல தடவைகளில் ஏற்படுவதுண்டு.

காரணம், ஆளும் தரப்பில் அமைச்சரவையில்உள்ளவர்களில் பலர்பெரமுனவின்அலுவலகத்திற்கு வருகை தருவதில்லை. எமது உறுப்பினர்கள் அதிகமாக உள்ள தென்மாவட்டங்களில்அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் இல்லை. இவ்வாறானநிலையில்நாம்ஆட்சியில் இருக்கின்றோம்என்றுஎவ்வாறுகூற

## கறுவா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாக்க வேண்டும். அதன்படி, இந்தப் பகுதியில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கத்தனியானசட்டம்கொண்டு வரப்படும்.இங்குகட்டடங்கள்மாத்திரம் இருந்தால் இப்பகுதிகளுக்கு யாரும் வருகை தர மாட்டார்கள்.

சுற்றுலா துறையில் தென் மாகாணத்திற்குஒருசிறப்பிடம்உள்ளது. காலிகோட்டையில்உள்ளஅனைத்து அரச அலுவலகங்களையும் அகற்றி சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் அவற்றை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். அத்துடன், முறையானதிட்டமிடலின் ஊடாக காலி நகரை சுற்றுலாப் பிரதேசமாகஅபிவிருத்திசெய்வதற்கும் நாம் செயற்பட்டு வருகின்றோம். அதன்படி, நாட்டின் முக்கிய சுற்றுலா நகரமாக காலி மாறும்.

சுற்றுலாத்துறை என்பது நாட்டிற்கு விரைவாக வருமானம் தரும் துறையாகும். அதிக பணம் செலவழிக்கும்சுற்றுலாப்பயணிகளை அதிகளவில் நாட்டிற்கு அழைத்து வர முயற்சிக்க வேண்டும்.

வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்று யாரும் நினைத்திருக்கவில்லை. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எரிபொருள்இருக்கவில்லை. உரமோ மருந்தோஇல்லை.இன்றுஅனைத்தும் இருக்கிறது. அதேபோன்று மக்கள் பணம் சம்பாதிக்கிறார்கள்.

மேலும், கறுவா விளைச்சலில் நாம் கவனம் செலுத்தவேண்டும். தேயிலை பயிருக்கு பொருத்தமான இடங்களில் தேயிலை பயிரிடுவதன் மூலமும், ஏனைய இடங்களில் கறுவா பயிரிடுவதன் மூலமும் அதிக வருமானத்தை ஈட்ட முடியும். அதேபோன்று, இப்பகுதிகளுக்கு தொழில்நுட்ப கல்வி வழங்கும் நிறுவனங்களை கொண்டு வர திட்டமிட்டுள்ளோம். இந்த நடவடிக்கைகளால் காலி பெரும் அபிவிருத்திஅடையும்எனநம்புகிறோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்காக500மில்லியனும், கடற்றொழிலாளர்களுக்கான வலை வழங்குவதற்காக500மில்லியனும் வழங்கப்படுகின்றது.

குறிப்பாக பிரதமர் தினேஸ் குணவர்த்தனா எதிர்வரும் 22 ஆம் திகதி சீனா செல்கின்றார். இதற்கான ஒப்பந்தத்தை சீனா செல்லும் பிரதமர் எதிர்வரும் வாரம் கைச்சாத்திடுவார் என நம்புகின்றேன்.

இதேநேரம் இந்திய அரசும் வடபகுதியின் அபிவிருத்திக்காக 3000 மில்லியன் நிதியை வழங்க முன்வந்துள்ளது.

குறிப்பாக கடல் ஆய்வு நடவடிக்கைகள், கடற் பகுதியில் பாரியளவிலாள கூடுகளில் மீன் வளர்ப்பதற்கான திட்டங்கள் மக்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கென இந்த நிதி வழங்கப்படுகின்றது.

இதேவேளை ஜப்பான் அரசும் வடக்கின் அபிவிருத்தி மற்றும் மக்களின் கடற்பாதுகாப்பு செயற்றிட்டங்களுக்காக 415 மில்லியன்வழங்கமுன்வந்துள்ளது.

அந்தவகையில் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை நாம் எமது மக்களுக்கானதாக சரியான வகையில்கொண்டுசென்றுமக்களின் வாழ்வியலில் சிறப்பான மாற்றத்தை உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தமைகுறிப்பிடத்தக்கது.

## கறுவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைக் பொறுப்பேற்றார். மக்கள் எரிபொருள் வரிசையில் நின்று உயிரிழந்தனர். உரம் இன்றி விவசாயிகள் வீதியில் இறங்கி போராடினர். இதன்போது பொருளாதாரத்தை பலப்படுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அவர், நாட்டுக்குதேவையானஎரிபொருளை பெற்றுகொடுத்து, விவசாயிகளுக்கு அவசியமான உரத்தையும் பெற்றுகொடுத்தமையால் விவசாயிகள் மீண்டும் விளைச்சல் நிலங்களுக்கு செல்ல ஆரம்பித்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டில் இந்த நாட்டுக்குஅரிசியைஇறக்குமதிசெய்ய வேண்டியிருந்தது. ஆனால், 2023 ஆம் ஆண்டில் நாட்டின் தேவைக்கு அவசியமான அரிசி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் கறுவாச் செய்கையை மேம்படுத்துவதாக வழங்கிய வாக்குறுதிக்கு அமைய, அதற்கான தனியான திணைக்களத்தை உருவாக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கான பணிகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டு மக்கள் வாழக்கூடிய சூழலை உருவாக்குவாரென நம்புகிறோம் என்றார்.

## நிர்மாணத்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைத்தொழில்துறையினருடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நிதி அமைச்சு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு என்பவற்றின் செயலாளர்களை உள்ளடக்கி,துறைசார்நிபுணர்களைக் கொண்ட இந்த நிபுணர் குழுவை நியமிக்கநடவடிக்கைஎடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அடுத்த வருடத்திற்குள் அனைத்து துறைகளிலும் உள்ள கைத்தொழில்துறையினருக்கு நிவாரணம் வழங்கி ஊக்கமளிக்க எதிர்பார்ப்பதாகவும்ஜனாதிபதிரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் தடைப்பட்ட திட்டங்களை மீள ஆரம்பிப்பது, முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்குதல், நிர்மாணச் சேவைகளை மேம்படுத்துதல் போன்றவற்றின் அடிப்படையில் பாரிய, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிர்மாணத்துறையில் ஈடுபட்டுள்ளதரப்பினர்எதிர்நோக்கும் பிரச்சினைகள்குறித்துஜனாதிபதியின் கவனத்திற்குக்கொண்டுவரப்பட்டது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகலரத்நாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர்கலாநிதிநந்தலால்வீரசிங்க, நிதிஅமைச்சின்செயலாளர்மஹிந்த சிறிவர்தனமற்றும்அமைச்சுக்களின் செயலாளர்கள்மற்றும்தொடர்புடைய நிறுவனங்களின் தலைவர்கள் நிர்மாணத்துறை பிரதிநிதிகள் பலரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும், தெங்குக்கைத்தொழில்தொடர்பான உற்பத்திகளில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்துறையினருக்கும் இடையிலான கலந்துரையாடலும் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தேசிய பொருளாதாரத்திற்கு தேங்காய் கைத்தொழிலின் பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட ஒரு போட்டித் தொழிலாக நாட்டில் தென்னைச் செய்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் தேசிய தெங்குக் கைத்தொழில் சபையொன்றை நிறுவுவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதன்போது தெங்குக் கைத் தொழிலில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன், அத்துறையில் பணிபுரிபவர்கள் முன்வைத்த பிரச்சினைகள் தொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

நிலத்திலிருந்து அதிகபட்சப் பயனைப்பெற்று தெங்கு உற்பத்தியை அதிகரிக்கவும், அந்தத் தொழில்துறையை அபிவிருத்தி செய்யவும், திட்டமிட்ட வகையில் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எதிர்பார்க்கும் இலக்குகளை அடைவதற்கு தெங்குக் கைத்தொழிலுடன் தொடர்புள்ள சகல நிறுவனங்களையும் ஒன்றிணைத்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் தெளிவுபடுத்தினார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் ஏனைய அமைச்சின் செயலாளர்கள்மற்றும்தொடர்புடைய நிறுவனங்களின்தலைவர்கள்மற்றும் அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## உண்ணாவிரதம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று பார்வையிட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறைச்சாலைக்கு சென்று 8 பேரையும்பார்வையிட்டுஇருந்தேன். அதில் 5 பேர் 3 ஆவது நாளாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள். பொய்யான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது அவர்களது கோரிக்கை. அவர்களது உடல் நிலை மோசமடைகின்றது.

அதில்சிலருக்குஆஸ்மா,நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் உள்ளன. அவர்கள்உரியமுறையில் மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்கப்படவில்லை. மனிதவுரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் இதுவரை அவர்களை பார்வையிடவில்லை.

கைது இடம்பெற்ற அன்றே மனிதவுரிமை ஆணைக்குழுவுக்கு அறிவித்த போதும் இதுவரை பார்வையிடவில்லை. மனிதவுரிமை ஆணைக்குழுவும் சட்டவிரோத கைதுகளுக்கும், குற்றச்சாட்டுக்களுக்கும் துணை போகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

சிறைச்சாலை ஊடகப்பேச்சாளர் வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் தெரிவித்த கருத்து முற்றுமுழுதாக பொய். கடந்த செவ்வாய்கிழமை நீதிமன்றத்திற்கு வருவதற்கு முன்பிருந்தே அவர்கள் உணவு எதனையும் உண்ணவில்லை. அதற்கு பிற்பாடும் அவர்கள் உணவு உண்ணவில்லை. மூன்றாவது நாளாக அவர்கள் உணவு உண்ணவில்லை.

அவர்களது குடும்பத்தினர் நேரடியாக சென்று பார்வையிட்ட போதும் அவர்கள் உணவு உண்ணவில்லை என்பதை தெரிவித்திருக்கிறார்கள். ஆலய நிர்வாகத்தினரும்சென்றுபார்வையிட்டிருந்தனர்.

அவர்களும் உண்ணாவிரதம் இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளார்கள். ஆகவே, சிறைச்சாலை ஊடகப்பேச்சாளர்கூறியதுதவறானது. இவர்கள் மீது நெருக்குவாரத்தை உருவாக்கி பொய்யாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அவர்களை ஏற்றுக் கொள்ள வைக்க இவ்வாறு செயற்படுகின்றார்களா அல்லது அவர்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தவைக்கமுயல்கின்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆகவே, இதனை விளங்கிக் கொண்டுபுலம்பெயர்தமிழ்மக்களும் இராஜதந்திர அழுத்தங்களை கொடுக்க வேண்டும். கொழும்பில் உள்ள இராஜதந்திர செயலங்களும் இந்த விடயத்தில் கரிசனை செலுத்த வேண்டும்.

வெள்ளிக்கிழமை(இன்று)நெடுங்கேணியில்ஆலயநிர்வாகத்தினரால் முன்னெடுக்கப்படும்போராட்டத்திற்கு அனைவரும்அணிதிரண்டுஆதரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன், சனிக்கிழமை (நாளை)கைதுசெய்யப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் வவுனியாவில் இடம்பெறவுள்ள போராட்டத்திலும் சகலரும் அணி திரண்டுஅவர்களின்விடுதலைக்காக குரல் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொளகின்றேன் எனத் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# எமது குரல்கள் ஓங்காத வண்ணம் தமிழர்களை அடிமைகளாக இலங்கை அரசு வைத்திருக்கிறது

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி வேதனை



ஆலயத்தை வழிபட கூட இங்கு உரிமையில்லை. அனைவரும் ஓரணியில் திரண்டு குரல் கொடுக்க வேண்டும் என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவி சிவானந்தன் ஜெனிற்றா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் பொதுச்சபை கூட்டம் வவுனியா நகரசபை மண்டபத்தில் புதன்கிழமை இடம்பெற்றது.

பொதுக்கூட்டம் நிறைவில் ஊடகங்கங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவி சிவானந்தன் ஜெனிற்றா மேற்குறிப்பிட்டவாறு கருத்து தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து ஊடகங்களுக்கு தெரிவித்தவை வருமாறு -

காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தின் ஊடாக உறவுகளை அங்கு அழைத்து அவர்களுக்கான மரணச் சான்றிதழுக்கான பதிவுகளை மேற்கொள்கின்றனர். அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக சான்றிதழும் எமக்கு வேண்டாம் எனவும் தெரிவித்து வருகின்றோம்.

ஆனால் காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தினர் உறவினர்களுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி கட்டாயம் பதிவு செய் யுங்கள். பதிவு செய்யப்பட்டால் மாத்திரமே நீங்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ற பதிவு இருக்கும். இல்லாவிடில் பதிவு இருக்காது எனவும் ஓட்டோவுக்கு நாங்கள் பணம் தருகின்றோம் வாருங்கள் எனக் கட்டாயப்படுத்துகின்றனர். இவ்வாறு மிகக்கேவலமான செயற்பாடடைத் தான் காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தினர் செய்து வருகின்றனர்.

எனவே, காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தை நாம் ஆரம்பக் கட்டத்திலேயே முற்றும் முழுதாக மறுத்திருந்தோம். அவர்கள் மக்களை ஏமாற்றி பொய்களைக் கூறி அவர்களிடம் பதிவுகளை மேற்கொள்கின்றனர். எனவே, சர்வதேச நாடுகள் இதற்கு அனுசரணை வழங்காது எமக்கான சர்வதேச நீதியைப் பெற்றுத்தர வேண்டும்.

தமிழ் மக்கள் அறவழியில் போராடுகின்ற ஒவ்வொரு போராட்டங்களையும் நசுக்குகின்ற முகமாக தடையுத்தரவுகளை விதித்து மிகவும் சட்டவிரோதமான கைதுகளை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். கைது இடம்பெறுவதைப் பார்க்கின்ற போது உண்மையாகவே அவர்கள் செய்யாத குற்றத்திற்கு குற்றங்கள் செய்ததாக எழுதி பொலிஸ் உத்தியோகத்தர்கள் நீதிமன்றில் ஆயர்படுத்துகின்றனர்.

நான்கூட பொலிஸ் உத்தியோகத்தருக்கு அடிக்கவே இல்லை. பொலிஸ் உத்தியோகத்தர் எனது கையை உடைக்க முற்பட்ட சமயத்தில் பொலிஸாரை தள்ளிவிட்டேனே தவிர அவர்களை அடிக்கவில்லை. ஆனால், பொலிஸார் எழுதியுள்ளனர் நான் பொலிஸாருக்கு அடித்ததாக.... அப்படியான பொய் குற்றச்சாட்டுக்களை பொலிஸார் மேற்கொள்கின்றனர். எட்டு நாள்கள் நான் சிறையில் இருந்தேன். தொடர்ச்சியாக வழக்கு விசாரணைகள் இடம்பெறுகின்றன. எனது கையடக்க தொலைபேசியை விசாரணைக்கு உட்படுத்துவதாக பெற்றுக்கொண்டுள்ளனர்.

வெடுக்குநாறி ஆலயத்தில் சிவராத்திரிக்கு வழிபட உரிமையில்லை என்றால் பாதுகாப்பு பிரிவினர் அவர்களை அடாவடியாகத் தாக்கி சாப்பாத்து கால்களுடன் ஆலயத்தினுள் சென்று அபிசேக பொருள்களை கால்களால் தட்டுகின்ற அடாவடி செயற்பாடு இங்கு இடம்பெறுகின்றது.

அதுமட்டுமின்றி, 8 பேரை குற்றமின்றி கைது செய்துள்ளனர். ஆலயத்தை வழிபட கூட இங்கு உரிமையில்லை. அவர்களின் உறவினர்கள் தெருவில் நின்று அழுகின்றனர். இந்த நாட்டில் வாழ உரிமையில்லை. நில உரிமை, ஆலய வழிபாடு உரிமை, ஜனநாயக போராட்ட உரிமை எவையும் இல்லை. ஆட்சிகள் மாறுகின்றன. ஆள்கள் மாறுகின்றனர். புதிய சட்டங்கள் வருகின்றன. எப்படி எம்மை அடக்க முடியுமோ அப்படி எம்மை அடக்குகின்றனர். எமது குரல்கள் ஓங்காத வண்ணம் தமிழர்களை அடிமைத்தனமாக வைத்திருக்கின்றனர். இவற்றுக்கு எதிராக நாம் அனைவரும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (05-100)




## திருகோணமலை மாவட்ட செயலக ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் கிராமிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி அமைப்பின் அனுசரணையுடன் சர்வதேச மகளிர் தின மாவட்ட கொண்டாட்டம் புதன்கிழமை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.



ஐக்கிய நாடுகள் சபையானது 2024 ஆம் ஆண்டிற்கான கருப் பொருளை 'பெண்களில் முதலீடு செய்யுங்கள்: முன்னேற்றத்தை விரைவுபடுத்துங்கள்' என்று குறிப்பிட்டுள்ளது. அதே போல் இந்த ஆண்டுக்கான பரப்புரைக் கருப்பொருள் 'அனைவரையும் உள்ளடக்கும் பணியை ஊக்குவிக்கவும்' என்பதாகும்.

பெண்கள் எவ்வாறு கௌரவிக்கப்பட வேண்டும் அவர்களுடைய ஆற்றல் மற்றும் திறமைகள் என்னவென்ற விடயங்களை இந்நிகழ்வின் போது தெளிவுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது திருகோணமலை மாவட்ட பெண்கள், சர்வதேச மகளிர் தினத்தில் பெண்கள் சார்பாக அரசாங்கத்திற்கு முன்வைக்கப்படும் கோரிக்கையை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சியிடம் கையளித்தனர்.

இதன்போது பெண்களுக்கான கேள்விகள் கேட்கப்பட்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. கலை, கலாசார நிகழ்வுகளும் வெகு விமர்சையாக நடைபெற்றன. மேலும் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பெண்களுக்கான இரண்டு நாள் செயலமர்வில் கலந்து கொண்ட பெண்களுக்கு பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அத்துகோரல, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ்,

மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள், தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி மற்றும் கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரி, மொறவெள உதவி பிரதேச செயலாளர் சத்யபிரியா, மாவட்ட மற்றும் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொலிஸ் பெண்கள் பிரிவு பொறுப்பதிகாரி, துறைசார் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக மாதர் சங்க உறுப்பினர்கள், கிராமிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி அமைப்பின் பணிப்பாளர் அசாட் மற்றும் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

## தென்கிழக்குப் பல்கலையில் 'ஸிஹாஹ் ஸித்தா' கிரந்தங்களின் மொழிபெயர்ப்பு வெளியீடு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்திய தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகம் நடத்திய தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகத்தின் 'ஸிஹாஹ் ஸித்தா' கிரந்தங்களின் (தமிழ்) மொழிபெயர்ப்புத் தொகுதி அறிமுகமும் 'மிஷ்காத்துல் மஸாபீஹ்' (தமிழ்) நூல் வெளியீடும் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் அண்மையில் பல்கலைக்கழக கலை கலாசார கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. மருதமுனை சார்பாக ஜம்இய்யத்துல் உலமாசபை தலைவர் அஷ்செய்க் எப்.எம்.அகமது



அன்சார் மௌலானா பெற்றுக் கொண்டார். (05)

## கற்பிட்டி மனிதாபிமான சகோதரத்துவ நிறுவன சர்வதேச மகளிர் தின நிகழ்வு



(எம்.எச்.எம் சியாஜ்)

'பெண்களில் முதலீடு செய்வோம் முன்னேற்றத்தை துரிதப்படுத்துவோம்' என்ற ஐக்கிய நாடுகள் சபையின் இவ்வாண்டிற்கான கருப் பொருளுக்கு அமைய கற்பிட்டி மனிதாபிமான சகோதரத்துவ நிறுவனத்தின் வளாகத்தினுள் நிறுவனத்தின் செயற்திட்ட பணிப்பாளரும் நிறைவேற்றுக் குழுவின் பொதுச் செயலாளருமான ஏ.எம்.எம் மஹூர் தலைமையில் இம்முறை மகளீர் தின





நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மனிதாபிமான சகோதரத்துவ நிறுவனத்தின் தேசிய தலைவர் கலாநிதி எஸ். பத்மராஜா கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டப்யூ.எஸ். எதிரிசிங்க, எச்.பி.எப். நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் உப தலைவர் அல்ஹாஜ் வை.எம்.எஸ் ஹமீத் , ஆகியோருடன் விசேட அதிதிகளாக கற்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் மஞ்சுலா, கற்பிட்டி பிரதேச கிராம உத்தியோகத்தர்களான றியாஸ், சஹீனாஸ்,விந்தா , தில்லையூர் மீனவ சங்க தலைவர் சபுருல்லாஹ்கான், கற்பிட்டி பிரதேச மகளீர் அபிவிருத்தி கூட்டுறவு சங்க தலைவி கே.றுவைஸா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பெண்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பொருளாதார, பால்நிலை, அச்சுறுத்தல்கள், வன்புணர்வுகளுக்கு உட்படுதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் அதற்கான தீர்வுகளை எவ்வாறு பெற்றுக் கொள்ளல் அதற்கான வழிமுறைகள் என்ன மற்றும் சுய முயற்சி அபிவிருத்திக் குழுக்களை உருவாக்கி பொருளாதார ரீதியில் முன்னேறத்தை நோக்கி எவ்வாறு பயணித்தல் என்பன பற்றிய

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# கடற்படையினர் மீதும் கொலை விசாரணை தேவை

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளைஞர் மற்றும் அவரது மனைவி ஆகியோர் வன்முறைக் கும்பல் ஒன்றால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் உயிரைக் காத்துக்கொள்ள கடற்படையினரிடம் தஞ்சம் கேட்டு அவர்களின் காவலரணுக்குள் ஒதுங்கிய போதும், அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்க மறுத்த கடற்படையினரின் கண் முன்பாகவே வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். உயிர் பிழைத்துள்ள மனைவி இது தொடர்பான குற்றச்சாட்டை ஏற்கனவே முன்வைத்திருந்தார். இப்போது அது தொடர்பான காணொலி ஒன்று வெளியாகி பரபரப்பைக் கிளப்பியுள்ளது.

அந்தக் காணொலியில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் கடற்படைக் காவலரணை வந்தடையும் ஒரு ஆணும் பெண்ணும் காவலரணில் இருந்த சிப்பாயிடம் ஏதோ முறையிடுகின்றனர். அவரும் அவர்களது முறைப்பாட்டை அடுத்து வெளியே வீதியில் அவர்கள் சொல்வது போன்று யாராவது நிற்கின்றார்களா என்பதை எட்டிப் பார்க்கின்றார். அதன் பின் இந்த இருவர் பற்றியும் காவலரணின் வதிவிடப் பகுதிக்குள் இருப்பவர்களுக்கு தகவல் சொல்கிறார்.

அங்கிருந்து வரும் ஒருவர் (அதிகாரியாக இருக்கலாம்) அந்த இளைஞன் மற்றும் பெண் சொல்லும் விடயத்தைக் கேட்டுவிட்டு அவர்களை அந்தக் காவலரணில் இருந்து வெளியேற்ற முயற்சிக்கிறார். தடி கொண்டு அடித்து விரட்டுகின்றார். அப்போதும் காவலரண் பகுதியைவிட்டு வெளியே செல்லமாட்டேன் என்று அந்த இளைஞன் பிடிவாதமாக மறுக்கிறார். உயிர்ப் பயம் காரணமாக அவர் அந்த இடம் மட்டுமே தனக்குப் பாதுகாப்பானது என்று கருதி உயிருக்குப் போராடுவது காணொலியில் நன்கு தெரிகின்றது.

இதைப் பார்த்த கொலைகாரக் கும்பல் அந்த இடத்திற்கு வந்து முதலில் கடற்படையினருடன் பேசிவிட்டு பின்னர் கடற்படையினர் முன்பாகவே காவலரண் பகுதிக்குள்ளேயே நுழைந்து அந்த இளைஞனையும் பெண்ணையும் தூக்கிச் செல்கின்றனர். கடற்படையினர் அதைத் தடுக்கவோ மறிக்கவே முயற்சிக்கவில்லை. இன்னும் சொன்னால், கொலைகாரக் கும்பல் அவர்கள் இருவரையும் இழுத்துச் செல்ல முயலும்போது நடக்கும் இழுபறியையும் அப்பால் சென்று வைத்துக்கொள்ளுங்கள் என்பது போன்று கடற்படையினர்விரட்டுகின்றனர்என்பதையும்காணொலியில் தெளிவாகப் பார்க்க முடிகின்றது.

இந்தக் காணொலிக் காட்சிகளின்படி கொலைக்கான தொடக்கப் புள்ளி கடற்படைக் காவலரனே. கொலைகாரக் கும்பல் கடற்படைக் காவலரணுக்குள் நுழைந்து அந்த இருவரையும் தூக்கிச் சென்று அவர்களில் ஒருவரைக் கொலை செய்வதற்கான துணிவை எப்படிப் பெற்றது? அந்தத் துணிவை அவர்கள் பெறுவதற்கு அங்கிருந்த கடற்படையினருக்கும் கொலைகாரக் கும்பலுக்கும் இடையில் முன்கூட்டிய தொடர்புகள் இருந்தனவா? கடற்படையினருக்கும்இந்தக்கொலையுடன்நேரடித்தொடர்பு இருக்கின்றதா? உயிர் அச்சம் காரணமாக வந்தவர்களை காவல்துறையினரிடம் ஒப்படைப்பதைவிடுத்து தமது இடத்திலிருந்து மனிதாபிமானம்கூட இன்றி கடற்படையினர் விரட்டிய பின்னணி என்ன? போன்ற பல கேள்விகள் காணொலியைப் பார்க்கும்போது எழுகின்றது.

அந்தக் காணொலியும் கடற்படையினரின் காவல் அரணில் பொருத்தப்பட்டிருந்த மறைகாணி (சிசிரிவி) மூலம் பெறப்பட்டது என்றே தெரியவருகின்றது. அது காவல்துறையினருக்கு வழங்கப்பட்டிருந்த நிலையில் அதனை அவர்கள் வெளியே கசியவிட்டுள்ளார்கள் என்று கருதப்படுகின்றது. எனவே காணொலி பொய்யானது, சோடிக்கப்பட்டதுஎன்கிறவாதங்களையும்கடற்படையினரால் வைக்க முடியாது. அதற்கும் மேலாக சம்பவம் தொடர்பில் கடற்படையினர் விசாரணை நடத்தி வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன. ஆனால் இது கடற்படையினரின் ஒழுக்க விசாரணைக்கு மட்டும் உட்பட்டதல்ல. சம்பந்தப்பட்ட அனைத்துக் கடற்படையினரும் கொலைக்கு உடந்தையாக இருந்தவர்கள் என்கிற அடிப்படையில் இந்தக் கொலை வழக்கில் உள்வாங்கப்படவேண்டியவர்கள். எனவே கடற்படை அந்த உறுப்பினர்கள் அனைவரையும் காவல்துறையினரிடம் ஒப்படைத்துகொலைவிசாரணைக்குஒத்துழைக்கவேண்டும்.

காவல்துறையும் அந்தக் காவலரணில் இருந்த கடற்படையினர் அனைவரையும் கைது செய்து கொலை விசாரணையைநடத்தவேண்டும்.குற்றவாளிகள்அனைவரும் விரைவில் தண்டிக்கப்படவேண்டும். இல்லையேல் இது போன்ற குற்றங்கள் பெருகுவதைத் தடுக்கவே முடியாது.

# விண்ணை தாண்டி வருவாயா

**என். சத்திய மூர்த்தி**

அண்மையில் யாழ்பாணத்தில் நடந்த 'வான் சாகசம் 2024' நிகழ்சியில் 250 தமிழ் இளைஞர்கள், விமானப்படையில்சேரவிண்ணப்பித்துள்ளனர்என்ற செய்தியை தமிழ் சமூக- அரசியல் தலைமைகள் படித்தார்களா என்று தெரியவில்லை. ஏன், அந்த 250 பேரில் அவர்களுடைய வீட்டு பிள்ளைகளும் அடங்கி இருக்கலாம், யாருக்கு தெரியும்!

தமிழ் மக்களை பொறுத்தவரையில், விடுதலை புலிகள் அமைப்பின் காலத்தில், விமானப்படை தங்களதுவாழ்வைசின்னபின்னப்படுத்தியதில்முக்கிய பங்கு வகித்ததாகவே இன்னமும் கருதுகிறார்கள். அதில் உண்மையும் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அரசின் விமானப்படைக்கு எதிராக, விடுதலை புலிகள் அமைப்பு தனக்கு என்று ஒரு விமானப்படையை அமைத்துக் கொண்டது. அதனால் மட்டும் இனப்போரின் திசையை மாற்றிவிட முடியவில்லை.

ஆனால், இந்த எண்ணவோட்டத்தில் இன்னமும் இருக்கும் தமிழ் மக்களின் பிள்ளைகள், விமானப்படையில் சேர விருப்பம் தெரிவித்து இருக்கிறார்கள் என்பது, ஒரு புதிய 'மெசேஜை' தமிழ்அரசியல்தலைமைகளுக்குதெரிவித்துள்ளது. அதிலும் குறிப்பாக, சிவராத்திரி விழா சம்மந்தமாக வெடுக்குநாறி மலையில், தமிழர்களைச் சாமி கும்பிடவிடாமல்பொலிஸார்அநியாயம்செய்ததைத் தொடர்ந்தே இந்த இளைஞர்கள் விமானப்படையில் சேர்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என்பதையும் யாரும் மறந்துவிடக்கூடாது.

இந்த இளைஞர்கள் இனப்பிரச்சினை குறித்து கரிசனை இல்லாதவர்கள் அல்லர். அவர்களது குடும்பமும்நண்பர்களும்இனப்போரில்பேரழிவை சந்தித்தார்கள் என்பதை எளிதில் மறக்கக் கூடியவர்களும்அல்லர். என்ன, விமானப்படையில் சேருவதற்கு விண்ணப்பித்ததன் மூலம், தற்போதைய தமிழ் சமூக –அரசியல் தலைமைகள் மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை மீண்டும் உணர்த்தி உள்ளார்கள்.

அதைவிட முக்கியமாக, உணர்வுபூர்வ அரசியலுக்கு அப்பால், தங்களுக்கான குடும்ப கடமைகள் உள்ளன. அதற்கு நிரந்தர வேலை ஒரு முக்கியமான கருவி மற்றும் கருதல். அந்தக் கடமையைத் தங்களது தந்தையர் தலைமுறை மறந்து, எப்போதுமே வெற்றிபெற முடியாத இனப்போரில் பங்குபெற்றதால் மட்டுமே இப்போது தங்களது எதிர்காலத்தை தொலைத்து நிற்கிறோம் என்ற தொனி பொருளின் பிரதிபலிப்பே, அவர்களது தற்போதைய முயற்சி.

கடந்த செப்டம்பர் மாதம் 'நீதிபதி சரவணராஜா விவகாரத்தில்' போராட்டம், அது தோல்வி அடைந்த பின்னர் அதே முடிவை சந்தித்த 'கதவடைப்பு' என்று அழைப்பு விடுத்த அரசியல் தலைமைகளை தமிழ் இளைஞர்கள் கண்டுகொள்ளவே இல்லை. ஏன் முன்னாள் போராளிகள் மற்றும் மிதவாத கட்சிகளின் தொண்டர்களும்கூட அந்த போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவே இல்லை. அதன் தொடர்ச்சியாகவே, தற்போது அந்த இளைஞர்கள், விமானப்படையில் சேர விருப்பம் தெரிவித்துள்ளதைக் கருதவேண்டும்.

### புதிது அல்ல

இந்தச் செய்தியை படித்தால், இனப்போர் முடிந்த கடந்த பதினைந்து வருடங்களில் இது என்னவோ புதிய விடயம் என்று எண்ணத் தோன்றும். அது தவறான முடிவு. இனப்போர் முடிந்த காலகட்டத்தில், இராணுவத்தில் சுமார் 125 தமிழ்ப் பெண்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அவர்கள், தங்களது பயிற்சி முடிந்து பணியில் இணைத்துக்கொள்ளப்பட்ட அதேதினம், அவர்களில் பலரையும் சிங்கள இராணுவத்தினர் பாலியல் முறைகேடுகளுக்கு உள்ளாக்கினார்கள் என்ற தவறான செய்தியை தமிழர் தரப்பில் இருந்து சிலர் வேண்டுமென்றே பரப்பினார்கள். இந்த இல்லாத செய்திக்கு, புலம்பெயர்ந்தோரில் சில தரப்புகளும் முன்யோசனை இன்றி விளம்பரம் கொடுத்தார்கள்.

ஆனால், அப்போது இராணுவத்தில் சேர்ந்திருந்த தமிழ் பெண்களில் சிலர் கொடுத்த பேட்டிகளில் இந்த தரப்பினர் நாக்கை புடுங்கிக்கொள்ளும் விதமாக சில கேள்விகளைக் கேட்டிருந்தனர். அதாவது, "இவ்வாறு புரளி கிளப்பும் பேர்வழிகளின் மனைவியோ, சகோதரியோ இராணுவத்தில் சேர்ந்திருந்தவர்களில் ஒருவராக இருந்திருந்தால், அவர்கள் இவ்வாறு எல்லாம் செய்வார்களா?" என்ற கேள்வி எத்தனை பேரின் மனதை தைத்தது என்று தெரியவில்லை. ஆனால், ஊருக்குப் பயந்து, சில பெற்றோர்களாவது, தங்களது பெண் பிள்ளைகளை இராணுவத்தில் இருந்து இராஜினாமா செய்ய வைத்ததாகவும் செய்திகள் தெரிவித்தன.

அப்போதும் சரி, அதற்கு முன்னர் பொலிஸில் ஆயிரம் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் சேர்ந்தபோதும் சரி, இது போன்ற புரளிகளும் போலி கரிசனைகளும் ஒரு 'ரவுண்ட்' வந்தன. அப்போது, முன்னாள் போராளிகள் என்று அறியப்பட்ட சிலர், அவ்வாறு பொலிஸில் சேர்ந்த சிலர் வீடுகளுக்கு சென்று மிரட்டினர் எனவும் அறிய முடிந்தது.

அதிலும் குறிப்பாக, பெண் பொலிஸாரின் பெற்றோர்களிடம், அந்தப் பெண்களைச் சிங்களக் காடைகள் பாலியல் ரீதியாக முறைகேடாக நடத்திக் கொன்றால், தங்களது ஆதரவை எதிர்பார்க்க வேண்டாம் என்றும் எச்சரிக்கை விடுத்தனர். பாவம் அந்த பெண்களும் அவர்களின் குடும்பத்தாரும். அவர்கள் பொலிஸ் பணியில் சேர்ந்ததே அன்று 27,000 ரூபாய் மாத சம்பளம் என்ற குடும்ப வருமானத்தைக் கருதி மட்டுமே!

அதைவிடக் கொடுமை, இதே பிரச்சினையை தமிழ் அறிவுஜீவிகள் கையாண்ட விதம். தமிழ்ப் பொலிஸாரை அவர்களது சிங்கள அதிகாரிகள் கொடுமைப்படுத்துவதாக அந்தப் புத்திசாலிகள் குறை கூறினார்கள். அதாவது, அதிகாரிகளின் வீடுகளில் 'ஆடர்லி' வேலை, தவிர வெய்யிலில் போக்குவரத்தை ஒழுங்கு செய்யும் பணி, ஆகிய அனைத்துமே அவர்களை பொறுத்தவரையில், அடிமைதனம். என்ன, அவர்கள் பொலிஸில் சேர்ந்த அனைத்துதமிழ்இளைஞர்களுக்கும்யுவதிகளுக்கும் முதல் நாளே பொலிஸ் மா அதிபர்களாகவே நேரடி பதவி உயர்வு கொடுக்கப்படவேண்டும் என்று கருதினார்களோ என்னவோ!

ஏது எப்படியோ, பலவாறு கூறியே, அந்த ஆயிரம் பொலிஸாரில் கன பேரை தமிழ் இனப்பற்றாளர்கள் தங்களது வேலையை ராஜினாமா செய்ய வைத்;தார்கள். அந்த வகையில், இந்தப் பொலிஸார் மற்றும்முதல்சுற்றில்இராணுவத்தில்சேர்ந்ததமிழ்ப் பெண்கள் ஆகியோரில் எத்தனை பேர் இன்னமும் பணியில் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால், இந்த இரண்டு முயற்சிகளுக்குப் பின்னர், இப்போதுதான் தமிழ் இளைஞர்கள் சீருடை சேவைகளில் சேர்த்துக்கொள்ளும்; வாய்ப்பு தோன்றி உள்ளது என்று கருத வேண்டியுள்ளது. அதேசமயம் தற்போதைய முயற்சியும் எங்கே போய் முடியப்போகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

### தேசிய நீரோட்டம்

என்றாலும், வெடுக்குநாறி உள்ளிட்ட இனப்பிரச்சினையின் சமகால விடயங்களில் பேரினவாதத்திற்கு ஆதரவான அரசின் போக்கு தமிழர் தரப்பிற்கு எதிராகவே உள்ளது. அரசின் இந்தப் போக்கை எதிரணியில் உள்ள எந்தவொரு தென்னிலங்கைக் கட்சியோ தலைவர்களோ கண்டிக்கவில்லை. அதுவே, தமிழர்களின் கோவில்கள் சம்மந்தப்பட்ட விடயத்தில் அவர்களின் கடந்த நான்கு ஆண்டு காலப் போக்காக இருந்து வந்துள்ளது.

முன்பு கோத்தபாய ராஜபக்சவின் ஆட்சி, அதனால் பேரினவாதம் தலைதூக்கி ஆடியது என்று கருதப்பட்டது. இன்றும், அரச தரப்பு ராஜபக்சாக்களின் ஆதரவுடனேயே செயல்பட முடியும்என்றநிலைமை. அவர்களின்பேரினவாதம் தொடருகிறது என்றிருந்தாலும், சஜித் பிரேமதாசா என்னவானார்? அனைத்துத் தரப்பினருக்கும் ஜனாதிபதியாக இருப்பேன் என்று அவ்வப்போது பேசிவரும் ஜேவிபி தலைவர் அனுரா குமார திஸநாயகாவிற்கு என்னவாயிற்று?

இந்தப் பின்னணியை வைத்து நோக்கும்போது, தமிழர் தரப்பிலிருந்து அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளபடக்கூடிய ஜனாதிபதி வேட்பாளர் களமிறங்குவது அவசியமாகிறது. முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு, அது தென்னிலங்கைக்கு முக்கியசெய்திஒன்றைத்தெரிவிக்கும்காரணியாகும் வாய்ப்புள்ளது.

காரணம், கடந்த 2019 ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்ற சஜித் பிரேமதாசா பெற்ற 42 சதவீத வாக்குகளில் பாதிக்கும் மேல் தமிழ் பேசும் மக்களிடமிருந்து பெறப்பட்டது. அதில், இலங்கை தமிழர், மலையக தமிழர் மற்றும் தமிழ் பேசும் முஸ்லீம் வாக்காளர்கள் அதில் அடங்குவார்கள்.

### ஒற்றுமை, ஒருமைப்பாடு

முதலில் தங்களிடையே ஒற்றுமை, பின்னர் அனைத்துத் தமிழ் பேசும் தரப்பினரோடும் ஒருமைப்பாடு என்று யாழ்பாண அறிவுஜீவிகள் காய் நகர்த்தினால் மட்டுமே பயன் உண்டாக வாய்ப்புள்ளது. அத்தகைய சூழலில் பொது

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்...)

# குடும்ப நலத்துறை பேராசிரியராக கலாநிதி அருளானந்தம் உயர்வு

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்குப் பல்கலைக்கழக



சௌக்கிய பராமரிப்பு பீட விரிவுரையாளர் டாக்டர் கந்தசாமி அருளானந்தம் குடும்பநலத்துறை பேராசிரியராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

தம்பிலுவில் கந்தசாமி விசாலாட்சி தம்பதியினரின் புதல்வராவரான வைத்திய கலாநிதி டாக்டர் அருளானந்தம் ஆரம்பக் கல்வியை தம்பிலுவில் சரஸ்வதி வித்யாலயத்திலும் பின்னர் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை அக்கரைப்பற்று முஸ்லிம்மகாவித்தியாலயத்திலும் பயின்றார்.

1984 இல் யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் இணைந்தார்.

வைத்திய கலாநிதியாகி அக்கரைப்பற்று ஆதரவைத்தியசாலை, கொழும்பு தேசிய வைத்தியசாலை, மட்டக்களப்பு போதனை வைத்தியசாலை திருக்கோவில் ஆதார வைத்திய சாலை போன்ற பணியிடங்களில் கடமையாற்றி 2009 இல் கிழக்கு பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்புபீடத்தில் ஆரம்பசுகாதார துறை விரிவுரையாளராக பதவி ஏற்றார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதலாவது குடும்ப நல துறை பேராசிரியராகவும் தம்பிலுல் கிராமத்தில் முதலாவது மருத்துவ துறை பேராசிரியராகவும் திகழ்கிறார்.

கிழக்குப் பல்கலைக்கழக மூதவை மற்றும் பேரவையின் உறுப்பினருமான இவர் மனிதாபிமானி, உலகத் தமிழ்மாமணி, வைத்தியஜோதி போன்ற பட்டங்களை பெற்றுள்ளார்.

இலங்கையில் குடும்ப நல துறையில் தமிழ்பேசும் சமூகத்தில் முதலாவது பேராசிரியராவார்.

இவர் முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணியாளர் டாக்டர் கே.முருகானந்தத்தின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# மணல்தீவு பாடசாலையில் 'சிமாட் போட்' கற்றல் தொகுதி

கடந்த முதலாம் திகதி புத்தளம் மணல்தீவு அரசினர் றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் ஜஎம்எச்ஓ மற்றும் ரட்ணம் பவுண்டேசன் இனால் வழங்கப்பட்ட சிமாட் போட் கற்றல் உபகரணத்தொகுதி உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டு ஆசிரியர்கள் மாணவர்களின் பயன்பாடு அவதானிக்கப்பட்டது.

இப்பாடசாலையில் 120 மாணவர்கள் கல்விகற்கின்றனர். மாணவர்களின் செயற்பாட்டை பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் மிகுந்த விருப்புடன் கற்றலில் ஈடுபட்டனர். மதிப்பீட்டின் போது எல்லோருமே அடிப்படைக்கற்றல் தேர்ச்சியினை குறித்த அலகில் பெற்றிருந்தனர். இப்பாடசாலையின் வளர்சிக்கு இத்திறன் வகுப்பறை மிகுந்த ஒரு கொடையாகும் என அதிபரும் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரும் குறிப்பிட்டனர்.

இந்நிகழ்வில் பங்குபற்றிய ஜஎம்எச்ஓ வதிவிடப்பிரதிநிதி தனது உரையில் ஆரம்ப பிரிவுமாணவர்களின் அடிப்படை தேர்சிகளுக்கு உதாரணமாக எழுத்துபொறிமுறை திறன்களுக்கு எவ்வித பங்கமும் வராமல் திறன்வகுப்பறை செயற்பாட்டை ஆசிரியர்கள் நன்கு திட்டமிடவேண்டும் என குறிப்பிட்டார், நிகழ்வுகள் மிகச்சிறப்பாக அமைந்தன. மாணவர்களின் ஈடுபாடு விதந்துரைக்கத்தக்கது.(05)

# விண்ணை தாண்டி வருவாயா

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வேட்பாளர், மலையகம் அல்லது முஸ்லீம் மக்களிடையே இருந்து தோன்றுவதற்கு வாய்ப்பு இருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

காரணம், தமிழ் பேசும் மக்களின் ஒருமைப்பாடு, சஜித் அணியை மட்டும் பாதிக்காது. ஜனாதிபதி ரணில் மற்றும் ஜேவிபி-ன் அனுரா ஆகியோரும் சிங்களவர்களுக்கு இடையேயான மும்முனைப் போட்டியில் அடிவாங்குவார்கள். அதனைச் சாதுரியமாகத் தங்களுக்குச் சதகமாக்கிக் கொள்ள தமிழ் பேசும் மக்கள் தலைமைகள் ஒன்று சேர வேண்டும்.

அல்லது அனைத்து தமிழ் பேசும் தரப்பினரும் ஒரு சேர சிங்கள வேட்பாளர்களுடன் கலந்துரையாடி தங்களுக்கு சாதகமாக இருக்கும் ஒருவரை ஆதரிக்க முடிவு செய்யலாம். அவ்வாறு நடைபெறுமேயானால், அது அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கும் ஒரு வித நம்பிக்கையை கொடுக்கும் வாய்ப்பு உள்ளது. அந்த மக்களும் தங்கள் சமூக- அரசியல் தலைமைகள் மீது நம்பிக்கை வைக்கும் வாய்ப்பு உள்ளது.

### பிழை விட்டோம்...

அவ்வாறு இல்லாமல், தமிழ் பேசும் மக்களின் தலைமைகள், அதிலும் குறிப்பாக இலங்கைத் தமிழ்த் தலைவர்கள், இன்னமும் தங்களது வறட்டு கௌரவத்தை கட்டிக்கொண்டு அழுதால், அதனால் அவர்கள் தங்களுக்கோ, தங்கள் மக்களுக்கோ சாதிக்கப்போவது எதுவுமில்லை. பின்னர் வழக்கம் போல் 'நாங்கள் பிழை விட்டோம்' என்று பிலாக்கணம் பாடலாம். ஆனால் அவர்களுக்கு ஒத்து ஊதக்கூட யாரும் உடனிருக்கப் போவதில்லை.

இதுவரையில், புதிய தலைமுறை தமிழ் இளைஞர்கள், தங்களது தலைமைகளை நம்புவதை நிறுத்திவிட்டு, ஏதாவது மேலை நாட்டில் வேலை தேடியோ இல்லை அரசியல் அகதியாகவோ செல்வதற்கான வழிவகைகளை மட்டுமே தேடிக்கொண்டிருக்கிறார்கள். தற்போது, நடைமுறைச் சாத்தியமானவற்றைச் சிந்திக்கத் தொடங்கி உள்ளார்கள். அவர்களில் 250 பேர் விமானப்படை வேலைக்கு மனு செய்துள்ளது இதனையே குறிக்கிறது.

கடந்த பல தசாம்சங்களாக, இலங்கை இராணுவத்திலும் பொலிஸிலும் தமிழர்களுக்கு பிரதிநித்துவம் இல்லை என்று குறிப்பாக விடுதலை புலிகள் அமைப்பு சர்வதேசத்தை நம்பவைத்துக் கொண்டிருந்தது. ஆனால், இனப்போரின் ஒரு கட்டத்தில், அன்று இராணுவத்திலும் பொலிஸ் படையிலும் பணியாற்றி வந்த பல தமிழர்களையும் உருட்டி மிரட்டிப் பதவி விலக செய்ய வைத்தது அவர்களே.

குறிப்பாக, அந்த இராணுவ அதிகாரிகளின் குடும்பத்தவர்கள் பகடைக் காய்களாக பயன்படுத்தப்பட்டனர். அவர்களின் பாதுகாப்பு கருதி அரசும் அவர்களை வெளி நாடுகளுக்கு குடிபெயர அனுமதித்தாக அன்றைய செய்திகள் தெரிவித்தன. இன்று அதுவே அடுத்த சுற்று வர தொடங்கி உள்ளது.

இதற்குக் காரணம் விடுதலை புலிகள் அமைப்பு அல்ல. மாறாக, தற்போதைய மிதவாத அரசியல்வாதிகளும் அவர்களது காசு பெறாத தனி நபர் பேராசையும்தான். அவ்வாறு இல்லையென்றால், அவர்களில் சிலர் இல்லாத ஊருக்கு வழி தேடி, எந்தவொரு அரசியல் தீர்வும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலும் இன்னமும் தீர்மானமாகவே இருக்கிறார்கள்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர் Kalaikkathir



# ஓமானிலிருந்து இலங்கை திரும்பிய பெண்ணுக்கு மதுபானம் கொடுத்து தங்க நகைகள் அபகரிப்பு

ஓமானில் வீட்டுப் பணிப் பெண்ணாக வேலை செய்துவிட்டு இலங்கை திரும்பிய பெண்ணை ஏமாற்றி அவரிடமிருந்த சுமார் பன்னிரெண்டு லட்சம் ரூபா பணம் மற்றும் உடைமைகளை அபகரித்துச் சென்ற நபரை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளை கல்கமுவ பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

பேஸ்புக் ஊடாக குறித்த பெண்ணுடன் தொடர்பு கொண்ட சந்தேக நபர், அவருடன் நெருங்கிய உறவை வளர்த்து வந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புத்தேகம மல்வனேகம பிரதேசத்தில் வசிக்கும் 41 வயதுடைய பெண் ஒருவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஓமானில் வீட்டு வேலைக்குச் சென்றிருந்த நிலையில், ஒரு நபருடன் அவர் பேஸ்புக்கின் ஊடாக நட்பை வளர்த்துள்ளார்.

இந்நிலையில், தன்னை இராணுவத்தை சேர்ந்தவர் என கூறிக்கொண்டு குறித்த நபர் திங்கட்கிழமை இரவு கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்துக்கு குறித்த பெண்ணுடன் செல்ல வந்துள்ளார்.

இதன்போதே சந்தேக நபர், குறித்த பெண்ணுடன் கொழும்புக்கு வந்து அவரது வங்கிக் கணக்குகளிலிருந்து பணத்தை எடுத்துக்கொண்டு கண்டிக்கு அழைத்துச் செல்ல முயற்சித்துள்ளார். இராணுவ முகாமுக்குச் செல்ல வேண்டும் எனக் கூறி கல்கமுவ பிரதேசத்துக்கு அழைத்துச்சென்று மதுபானம் கொடுத்து குறித்த பெண்ணை மயக்கமடையச் செய்து ஏழரை லட்சம் ரூபா, தங்க நகைகள், இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் பணம் என்பவற்றை அபகரித்து தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில், இது தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் கல்கமுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(05)

# தம்பிலுவில் கிராமத்தின் முதலாவது மருத்துவ பேராசிரியருக்கு வரவேற்பு







(வி.ரி.சகாதேவராஜா)

தம்பிலுவில் கிராமத்தில் முதலாவது மருத்துவத் துறை பேராசிரியரான கிழக்கு பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீடத்தின் குடும்ப நலத்துறை பேராசிரியர் வைத்திய கலாநிதி டாக்டர் கந்தசாமி அருளானந்தத்துக்கு புதன்கிழமை பெரு வரவேற்பு அளிக்கப் பட்டது.

தம்பிலுவில் விநாயகபுரம் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் அதன் பணிப்பாளர் கண. இராஜரத்தினம் கண்ணன் தலைமையில் இந்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

அண்மையில் குடும்ப நலத் துறை பேராசிரியராக பதவி உயர்வு பெற்ற தம்பிலுவிலைச் சேர்ந்த டாக்டர் கந்தசாமி அருளானந்தம் வரவேற்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

குருகுல மாணவர்களும் கலந்து கொண்டனர். (05)



## சீனாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளபதிலெப்டினன் ஜெனரல் விக்கும லியனகே ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் போது நன்றியுடன் ஏற்றுக்கொண்டனர்.

உபகரணங்களை வழங்குவது தொடர்பான ஆவணங்களில் முறையான கையொப்பமிடுதல் நிகழ்வு கியூ சென்கொங் மற்றும் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோருக்கு இடையே நடைபெற்றது.

பதினெட்டு சுநுழுனு 4000 வெடிகுண்டு அகற்றும் நடுத்தர ரோபோக்கள், பதினெட்டு சுநுழுனு 400 வெடிக்கும் ஆயுதங்களை அகற்றும் ரோபோக்கள், 10 வெடி எதிர்ப்பு போர்வைகள், 10 வெடி பாதுகாப்பு தாங்கிகள் மற்றும் வாகனங்கள் அடையாளமாக பாதுகாப்புஅமைச்சின்செயலாளரிடம் கையளிக்கப்பட்டவை இராணுவத் தளபதியுடம் அதிகாரபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டன.

## நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன தெரிவித்தார்.

இதற்கமைய, 19ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையும், 20ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையிலும் விவாதம் நடைபெறவுள்ளது. 20ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நம்பிக்கையில்லாப் பிரேரரணை தொடர்பான வாக்கெடுப்பை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக பதில் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அத்துடன் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை சேர் பெறுமதி வரிச்சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி மற்றும் கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி என்பன குறித்த விவாதம் நடைபெறவுள்ளது.

மறுநாள் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.கருணாரத்ன, பந்துல பஸ்நாயக்க மற்றும் வைத்தியகலாநிதி பி.எம்.பி.சிறில் ஆகியோர் தொடர்பான அனுதாபப்பிரேரணையை எடுத்துக் கொள்ளவும் இங்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் பதில் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

## மலையகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்வாங்குவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தலவாக்கலை ஹொலிரூட் தோட்டத்தில் தீயினால் பாதிக்கப்பட்டு, தற்காலிக குடில்களில் வசித்த 24 குடும்பங்களுக்கு, குடிநீர், மின்சாரம், உட்கட்டமைப்பு உட்பட சகல வசதிகளுடன் கூடிய தனி வீடுகள், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமானால் இன்று வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், அவர்களுக்கு பிரத்தியேக 'முகவரி' வழங்கப்பட்டு, வீடுகளுக்கு முன் வைப்பதற்கான தபால்பெட்டியும் வழங்கப்பட்டுள்ளது.

மலையகத்தில் 1,76,000 குடும்பங்களுக்கு சௌமியபூமி காணி உரிமை வழங்கும் திட்டம் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் ஜனன தினத்தன்று ஆரம்பமாகுமென இதன்போது அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

## 5 இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருந்தனர்.


கைது செய்யப்பட்டவர்களை விசாரணைகளின் பின்னர் மேலதிக நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை , ஐவரையும் 26ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.







# யாழ்ப்பாணத்துத் தவயோக சிங்கமான சிவ யோக சுவாமிகள்



பாரதம் என்பது இன்றைய இந்தியாவை மட்டுமன்றி தெற்காசியாவை குறிப்பதாகவே எம் புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது .

அத்தகு பாரத தேசத்தை ஞானபூமி என்றும் கர்ம பூமி என்றும் எம் ஆன்றோர்கள் போற்றி மகிழ்ந்தனர்.

எனவே இந்த மண்ணில் காலத்திற்கு காலம் அருளாளர்கள் அவதரிப்பது இயல்பானது. ஆயினும், அவர்களை ஞான நாட்டம் உள்ளோரே புரிந்து கொண்டனர்.

அண்மைக்காலத்தில் தோன்றிய ரமண மகரிஷி ஆகட்டும் யாழ்ப்பாணத்து சிவயோகர் ஆகட்டும் அவர்கள் இத்தகு அருளாளர்களுக்கு நல் உதாரணம் ஆவர்.

இவர் மரபில் வைதிக சைவர். ஆனால், சமயாதீதராகவும் தத்துவாதீதராகவும் திகழ்ந்தவர்.

1872 மே மாதம் 29 ஆம் திகதி (ஆங்கீரச வைகாசி அவிட்ட நக்ஷத்திரம் ) கொழும்புத்துறையில் அவதரித்த யோகர் 1897ல் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சுவாமி விவேகானந்தரை தரிசித்தார்.

திருமுறைகளையும் திருக்குறளையும் நன்கு கற்ற இவர் உபநிடதங்களிலும் பகவத்கீதையிலும் சங்கர பாஷ்யத்திலும் ஆழுங்காற்பட்டு காணப்பட்டார். தவிரவும் பிற சமய நூல்களான பைபிள் முதலியவும் கற்பதில் ஆர்வமுடையவராக இருந்ததாக அறியக்கிடக்கிறது.

இவரது ஞான தாகம் நல்லூர் தேரடியில் விசர்க்கோலம் கொண்டு காட்சி தந்த செல்லப்ப தேசிகரை குருவாகக் கொள்ளச் செய்தது.

தன் தவ வாழ்வின் ஆரம்பத்தில் உன்மத்தர் போல காட்சி தந்த யோகர் பிறகு ஆங்கொரு குடிசையில் தங்கியிருந்தார்.

கால கதியில் அன்பர்கள் பலரும் அங்கு குழுமினர். அவரும் அழகிய தவ கோலராக காட்சி தரலானார். மோனமுடி தரித்து ராஜாங்க சைவத்தின் சின்னமாகத் தோன்றினார்.

அவர் தம் குடிசையில் இருப்பதோடு நின்று விடாமல் நாடெங்கும் சென்று அன்பர்களை வளர்த்தார். பலரை திருத்தி ஆட்கொண்டார். இயல்பாக அதிசயங்களைச் செய்தார்.

தன் அடியார் திருக்கூட்டத்தை கொண்டு சிவத்தொண்டர் நிலையத்தை ஞான சாதனை பயிலும் நிலையமாக உருவாக்கினார். சிவதொண்டன் என்ற ஏட்டை தொடங்கினார்.

திருவடி வழிபாடு, பாத யாத்திரை , பஜனை என்ற மரபு வழியில் அடியார்களை ஆற்றுப்படுத்திய யோகர் சுவாமிகள் வேத சிவாகம வழிபாட்டிலும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

ஆகம முறை கோயில் வழிபாடுகளை ஆற்றுவதன் முக்கியத்துவத்தையும் தன் அன்பர்களுக்கு வலியுறுத்தினார். ஆகமங்களில் குறிப்பிடப்படும் அபிஷேக ஆராதனைகளை சுவாமிகள் பெரிதும் போற்றியிருக்கிறார். அதை செய்ய தூண்டியுமிருக்கிறார்.

யோகர் எழுதிய பாடல்கள் ‘நற்சிந்தனை‘ என்று தொகுக்கப்பட்டிருக்கின்றன. அவரது அருள்மொழிகள் ‘எங்கள் ஆசான் அருள்மொழிகள்‘ என்று தொகுக்கப்பட்டுள்ளன.

அது போலவே யோகர் சுவாமிகள்பலப்பலஅற்புதங்களைச் செய்தவர். ஆனால், நிகழ்ந்தவை இவற்றுக்கும் தமக்கு சம்பந்தம் இல்லாதது போல இருக்கும் இயல்புடையவர்.

ஆன்மா நித்யம் ஆன
பொருளென
ஆசான் சொல்லக்
கேட்டிருந்தோம்
அதையே மறந்தோம்
பிறந்தோம் இனிநாம்
அதுவே நாமென
எண்ணிடுவோம்

என்பது ஒரு நற்சிந்தனைப்பாடல். ‘ஓதுக அது நாம் ஓம் தத் சத் ஓம்‘ என்று பல இடங்களில் பாடியிருக்கிறார்.

சைவத்திருமுறைகளில் பெரிதும் ஈடுபாட்டையவர் யோகர் சுவாமிகள். பலரையும் பாட வைத்து தாமும் உள்ளம் உருகி பாடும் இயல்புடையவர்.

ஒரு பொல்லாப்பும் இல்லை, முழுதுமுண்மை, எப்பவோ முடிந்தகாரியம், நாமறியோம் என்ற மகா வாக்கியங்களை ஓயாது சொல்லிக் கொண்டிருந்தார்.


இந்த மகா யோகி குறித்து நாமறிந்தவை சிலவே. அறியாதவை பல. அவரை சிந்தித்து வந்திப்போரை இப்போதும் அவர் வழி நடத்துகிறார். பங்குனி ஆயில்யம் யோக மாமுனிவரின் குருபூஜைத் தினமாகும்.

யுக தர்ம ப்ரவர்தக குப்த நரம்
க்ருத பக்தி விகாஸன விச்வஹிதம்/
ஜித காஞ்சன காம ப்ரபஞ்ச ஹரம்
ப்ரணமாமி யோகாசார்ய சிவம்//

சுப வீணாகான புர ஸந்நிஹிதம்
சிசு சௌம்ய மகம்ய ப்ரணம்ய
வரம்/
தவ ராஜ ஸுவிசால ஸமுத்ர மயம்
ப்ரணமாமி யோகாசார்ய சிவம்//

அக மோசன துஷ்க்ருத முக்தி கரம்
சிவ ஷண்முக ஜோதி யோக மயம்/
ஸுக மங்கள ஸத்குண விநோத குரும்
ப்ரணமாமி யோகாசார்ய சிவம்//

யுகத்திற்கேற்ப தர்மத்தை அறிவிப்பதற்காக மனித வடிவில் மறைந்திருப்பவர், பக்தி எழுச்சி ஏற்படுத்தி உலக நன்மையுண்டாக்கியவர், காமம், பொன் ஆகிய உலகமயக்கத்தை வென்றவர் அத்தகைய யோக மாமுனிவராகிய ஆசார்யரான சிவ வடிவினரை



வணங்குகிறேன்.

மங்களகரமான யாழ்ப்பாண நகரில் எப்பொழுதும் உள்ளவர், குழந்தை போன்ற தோற்றமும் செயலும் மனமும் உடையவர், எளிதில் அடைய முடியாதவர், வணக்கத்திற்குரியவர், தவத்தில் அரசராக திகழ்பவர், பரந்த கடல் போன்றவர், அத்தகைய யோக மாமுனிவராகிய ஆசார்யரான சிவ வடிவினரை வணங்குகிறேன்.

பாவத்தைப் போக்குபவர், கெடுதல் தரும் நிகழ்வுகளை தடுப்பவர், சிவ ஷண்முக ஜோதி வடிவமாக நல்லூர் கந்தனின் அருள் மிகப் பெற்ற யோகியாகத் திகழ்பவர், சுகத்தையும் மங்களமான சத்குணங்களையும் கொண்ட விநோதமான குருவாக விளங்குபவர், அத்தகைய யோக மாமுனிவராகிய ஆசார்யரான சிவ வடிவினரை வணங்குகிறேன்.

**-சிவஸ்ரீ. தியாக. மயூரகிரிக்குருக்கள்**



பாடல் எண் : 1 பண் : இந்தளம்

பித்தாபிறை சூடீபெரு
மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி
அல்லேனென லாமே

பொழிப்புரை:

பித்தனே, பிறையைக் கண்ணியாகச் சூடியவனே, பெருமை உடையவனே, பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண்ணதாகிய, ஸ்அருட்டுறைஸ் என்னும் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் தலைவனே, எனது நெஞ்சத்துள் உன்னை அகலாது வைத்தருளினாய்; அதனால், எவ்வாற்றானும் உன்னை மறவாமலே நினைந்து, முன்பே உனக்கு அடியவனாகி, இப்பொழுது, ஸ்உனக்கு அடியவன் அல்லேன்ஸ் என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

# மஹிந்த ராஜபக்சவின் குடும்பத்தையே ரணில் விக்கிரமசிங்க வாழ வைத்தார்

## ரஞ்சித் மத்துவ பண்டார



ரணில் விக்கிரமசிங்க மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தையே வாழ வைத்துள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்துவ பண்டார தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு நேற்று (வியாழக்கிழமை) விஜயம் செய்த நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடு மிகவும் மோசமாக சீரழிந்த நிலையில் உள்ளது. மூன்று வேளை சாப்பிட்டவர்கள் இரண்டு வேளையும், இரண்டு வேளை சாப்பிட்டவர்கள் ஒரு வேளையும் சாப்பிடும் வங்குரோத்து நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலையில் இடம்பெறும் விசேட நிகழ்வுகளில் மாணவர்கள் மரணிக்கும் நிலை கூட ஏற்பட்டுள்ளது. வன்னி மாவட்டத்தில் வாழும் மக்கள் பிரதானமாக விவசாயத்தை மையமாக கொண்டு வாழ்கிறார்கள். நோயுற்ற நிலையில் வைத்தியசாலை செல்லும் போது அங்கு மருந்துகள் இல்லாத நிலை உள்ளது. இதனால் பலர் மரணிக்கும் நிலை உள்ளது. சுகாதார அமைச்சராக இருந்த ஒருவர் ஊழல் மோசடி செய்து சிறையில் உள்ளார்.

போசாக்கு இன்றி குழந்தைகள் மோசமான நிலையில் காணப்படுகின்றனர். இந்தநிலைக்கு தற்போதைய அரசாங்கமும் பதில் சொல்ல வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவும் ஏனையவர்களும் எமது குழந்தைகள் தொடர்பில் சிந்திக்காது தமது அரசியல் குறித்து சிந்திக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும்.

இன்னும் ஒரு சில மாதங்களில் தேர்தல்கள் வர இருக்கின்றது. மொட்டு சின்னமோ அல்லது ரணிலோ வந்தால் தற்போதைய நிலை தான் நீடிக்கும். ஐக்கிய மக்கள் சக்தியை பலப்படுத்த வேண்டும். கடந்த காலத்தில் மக்கள் வீதிக்கு இறங்கி மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை வீட்டுக்கு அனுப்பினர். ரணில் விக்கிரமசிங்க மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தையே வாழ வைத்துள்ளார்.

அடுத்து அநுரகுமார திஸாநாயக்காவின் கட்சி இருந்த காலத்தில் இந்த நாட்டில் கொலை, கொள்ளை நடந்தது. அவர்கள் ஆட்சியில் மக்களுக்கான ஆட்சி எதனையும் செய்யவில்லை. அவர்களுடைய மதம், சாதி கிடையாது. அவர்கள் கூறும் கருத்து மதங்களை வணங்க வேண்டிய அவசியமில்லை என்பது. அவர்களையும் நாம் புறக்கணித்து ஐக்கிய மக்கள் சக்தி மூலம் மக்களுக்கான ஆட்சியை உருவாக்க வேண்டும். - என்றார்.

(05-100)

# கிரிக்கெட் வீரர் பயணித்த கார் லொறியுடன் மோதி விபத்து



அநுராதபுரம், திரப்பன பகுதியில் இலங்கையின் முன்னாள் கிரிக்கெற் வீரர் லஹிரு திரிமான்ன பயணித்த கார், லொறியுடன் மோதி விபத்துக் குள்ளானது.

விபத்தில் காரில் பயணித்த மூவரும் லொறியின் சாரதியும் மற்றுமொருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து நேற்று (வியாழக்கிழமை) காலை 7.45 மணியளவில் இடம்பெற்றது.

(05)

# வைத்தியர் சுதர்ஷன சிஐடியினரால் கைது

சர்ச்சைக்குரிய மருந்து இறக்குமதி விவகாரம் தொடர்பில் மற்றொருவரும் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மருத்துவ விநியோகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஏ. டி சுதர்ஷன என்பவரே குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார் ணப் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# ரூபவாஹினிக்கு ரூ. 9 லட்சம் கடன் வைத்துள்ள அமைச்சர்



நவகமுவ பெரஹரவின் நேரடி ஒலிபரப்புக்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட வேண்டிய 9 லட்சம் ரூபாவை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே செலுத்தத் தவறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி இடம்பெற்ற நவகமு பிரதேச விஹாரை ஒன்றின் 188 ஆவது ரந்தோலி பெரஹராவை நேரடியாக ஒளிபரப்புவதற்காக இந்தத் தொகை செலவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

டயானா கமகேவின் வேண்டுகோளுக்கிணங்க ரூபாவாஹினி கூட்டுத்தாபனம் நவகமுவ பெரஹராவை நேரடி ஒளிபரப்பு செய்துள்ளது.

இந்நிலையில், குறித்த நிலுவைத் தொகை தொடர்பில் ரூபவாஹினி கூட்டுத்தாபன கணக்காளர், இராஜாங்க அமைச்சரிடம் பலமுறை நினைவூட்டியும் இதுவரை குறித்த தொகை வழங்கப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.(05)

# மா அரைத்தல், பனை ஓலை உற்பத்தி சுயதொழில் மூலம் சாதனை படைப்பு!

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவில் வசித்துவரும் தொழில் முயற்சியாண்மையாளரான விஜய பாரதி, தனது மா அரைத்தல் தொழில் மூலமாக பல முன்னேற்றங்களை கண்டுள்ளார்.

இவர் பாலம்போட்டாறு கிராமத்தில் வசித்து வரும் நிலையில் சுயதொழில் முயற்சியாண்மையாளராக விளங்குகிறார்.

பனை ஓலை உற்பத்தி மற்றும் அரிசி மா உற்பத்தி மூலமாக பல இலாபகரமான முன்னேற்றங்களை அடைந்துள்ளார்.

(05)

# தலவாக்கலை ஒலிரூட் தோட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தனி வீடு

## அமைச்சர் ஜீவன் தலைமையில் மக்கள் பாவனைக்கு

தலவாக்கலை ஒலிரூட் தோட்டத்தில் தீயால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடில்களில் வசித்த குடும்பங்களுக்கு, குடிநீர், மின்சாரம், உட்கட்டமைப்பு உட்பட சகல வசதிகளுடன் கூடிய தனி வீடுகள், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமானால் நேற்று (வியாழக்கிழமை) வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், அவர்களுக்கு பிரத்தியேக 'முகவரி' வழங்கப்பட்டு, வீடுகளுக்கு முன் வைப்பதற்கான கடித பெட்டியும் வழங்கப்பட்டது.

ஒலிரூட் தோட்டத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடில்களில் வாழ்ந்துவந்த 24 குடும்பங்களுக்கு தனி வீடுகளை அமைப்பதற்கான வேலைத்திட்டம் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு ஊடாக முன்னெடுக்கப்பட்டது.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட வீட்டு திட்டங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. எனினும், முழுமைப்படுத்தப்பட்ட வீடுகளே மக்களுக்கு கையளிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டு, குடிநீர், மின்சாரம், வீதி உட்பட சகல உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும் என அமைச்சர் துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதன்பிரகாரம் முழுமைப்படுத்தப்பட்ட வீட்டு திட்டமே நேற்று கையளிக்கப்பட்டது.



நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் இ.தொ.காவின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான பி. சக்திவேல், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவரும், இ.தொ.காவின் உப தலைவரும், சட்டத்தரணியுமான பாரத் அருள்சாமி, உப தலைவர் சச்சிதானந்தன், முன்னாள் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், மக்கள் என பெருமாளனோர் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உட்பட அரச அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர். (05)

# பல்கலைக்கழக மாணவர்களுடன் சென்ற பஸ் ஜயவர்தனபுர பல்கலை மதிலுடன் மேதியது

ஹோமாகம டிப்போவுக்குச் சொந்தமான இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று நேற்று (வியாழக்கிழமை) காலை விபத்துக்குள்ளானது.

தேசிய வணிக முகாமைத்துவ பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றே விபத்தில் சிக்கியுள்ளது.

மேற்படி பல்கலைக்கழகம் அருகே பஸ் கட்டுப்பாட்டையிழந்து ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மதிலின் ஒரு பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தின் போது பஸ்ஸில் பல்கலைக்கழக மாணவர்கள் இருந்த போதிலும், விபத்தில் அவர்களுக்கு காயம் ஏற்படவில்லை.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹோமாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



20 years of Excellence

# STUDY ABROAD OPEN DAY JAFFNA



MEET THE STUDY ABROAD REPRESENTATIVES

**DATE**
16th MARCH (Saturday)

**TIME**
11AM - 4PM

**VENUE**
CULTURAL CENTRE, JAFFNA

**WHY ICBT STUDY ABROAD ?**

- இலவச IELTS வகுப்புகள்
- கற்கை நெறிக்கு பின்னரான வேலைவாய்ப்புகள்
- 50% வரையிலான புலமைப் பரிசில்
- புதிய விசா நடைமுறைகள் பற்றிய தகவல்கள்.
- இளமாணி மற்றும் முதுமாணி கற்கை தொடர்பான தகவல்கள
- IELTS விலக்களிப்பு

ENTRANCE FREE

*Conditions Apply

**ALL OUR SERVICES ARE ABSOLUTELY FREE !!**

ICBT Study Abroad

273,
Navalar Rd, Jaffna,
Sri Lanka.

0773 442 628
0768 505 909
0773 631 138

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் விசேட பூஜைகளுடன் சிவராத்திரி இறுதி நகர்வலம்!



தெட்சணகைலாயம் திருக்கோணேஸ்வரம் மாதுறை அம்பாள் உடனுறை கோணேஸ



வரப்பெருமான் திருக்கோயில் மகா சிவராத்திரி பெருவிழாவின் இறுதி நாள் நகர்வலம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் விசேட பூஜைகளுடன், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் சிவராத்திரி பெருவிழாவின் இறுதி நகர்வலம் மிக சிறப்பாக நடைபெற்றது.

சிவராத்திரி பெருவிழாவின் இறுதி நகர்வலம் அருள்மிகு பத்தரகாளி அம்பாள் ஆலயத்திலிருந்து கேரளா செண்டை மேளம் முழங்க, பரதநாட்டியகலைஞர்களின் நடனநிகழ்வு, குதிரையாட்டம், பறவையாட்டம்,கோலாட்டம் உட்பட பல்வேறுகலைநிகழ்வுகளுடன் இடம்பெற்ற நகர்வலத்தில் பெருந்திரளானபக்தஅடியார்கள் கலந்துக்கொண்டனர்.

அருள்மிகு பத்தரகாளி அம்பாள் ஆலயத்திலிருந்து புறப்பட்ட தேர்பவனியுடன் ஆளுநர் செந்தில் தொண்டமான்நடைபவனியில் கலந்துகொண்டார்.

கோணேஸ்வரரின் இறுதிநாள் நகர்வலத்தில் கலந்துகொண்ட பக்தர்களுக்காக ஆளுநரின் ஏற்பாட்டில் தண்ணீர் பந்தல், தேநீர், பிரசாதங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இப்பெருவிழாவில் தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமான், திருகோணமலை மாவட்ட நலன்புரி அமைப்பின்செயலாளர்குகதாசன்,கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள்திணைக்களத்தின்பணிப்பாளர்,அரசியல் தலைமைகள்,அரச உத்தியோகஸ்தர்கள்,கலைஞர்கள்,சிவில் அமைப்பினர்கள் உட்பட பெருந்திரளான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர். (05)



# திருமலையில் பெரும் போகவேளாண்மை அறுவடை இறுதிக்கட்டத்தை அடைந்தது



திருகோணமலை மாவட்டத்தில் பெரும் போக வேளாண்மை அறுவடை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.

இந்த நிலையில் அரசாங்கத்தால் இதுவரைக்கும் நெல் கொள்வனவு செய்யப்படவில்லை, நிர்ணயிக்கப்பட்ட விலை வழங்கப்படவில்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டம் தம்பலகமம் பிரதேச செயலாளர்களின் உட்பட்ட ஆணை வெட்டுவான், இதர பள்ளம் முதலான பகுதிகளில் சுமார் 1200 ஏக்கருக்கும்மேற்பட்ட வயல்நிலங்களில்பெரும்போக வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் காரணமாக தாம் அறுவடை செய்த நெல்லை தனியார் வியாபாரிகள் குறைந்த விலைக்குக் கொள்வளவு செய்வதாகவும் இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறுகின்றனர்.

எவ்வளவு கஷ்டப்பட்டு வேளாண்மை செய்த போதிலும் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்குக்கொள்வளவுசெய்யாததன் காரணமாகத் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மழை வெள்ளப் பெருக்கு முதலானவற்றுக்கு முகம் கொடுத்து பெரும் போக வேளாண்மை செய்கை மேற்கொண்டுள்ளோம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பெரும்போக வேளாண்மை செய்கையில் ஈடுபட்ட விவசாயி, நாங்கள் கஷ்டத்தின் மத்தியில் வேளாண்மை செய்தோம் அரசாங்கம் நெல்லை நிர்ணயித்த விளையில் கொள்வனவு செய்யாததால் தனியார் குறைந்த விலையில் கொள்வனவே செய்கிறார்கள்.

இதனால் நாங்கள் நஷ்டப்படுவதோடு எதிர்வரும் போகத்தை எவ்வாறு செய்வதென்று திண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

ஓர் ஏக்கருக்கு 15 தொடக்கம் 20 மூடைகள் விளைகின்றன.மிஷன் கூலி, வெட்டு கூலி எல்லாம் போக சரியாகிவிடும் மிக கஷ்டத்தின் வேளாண்மை செய்தோம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும் அரசாங்கம் அறுவடைகள் முடிவடைந்த பின்பு தான் நெல்லைக் கொள்வனம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீடுகளில் நெல்லைச் சேமித்து வைத்து விற்பனை செய்யக்கூடிய அளவுக்கு அவகாசம் இல்லை. ஏனென்றால் கடன்பட்டு தான் பெரும் போக வேளாண்மை செய்துள்ளோம்.

அறுவடையின் போது தனியார் தமது விருப்பப்படி நெல்லைக் கொள்வனவு செய்வதால் அவர்களுக்கே கொடுக்க வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.(05)

# திட்டமிடல் பணிப்பாளரோடு தொழிற்சங்கத்தினர் சந்திப்பு



(சர்ஜுன் லாபீர்)

அம்பாறை மாவட்ட திட்டமிடல் புதிய பணிப்பாளர் எம்.ஏ முனாஸீர் அவர்களுக்கும்,அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத்திற்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பு நேற்று(வியாழக்கிழமை) அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத் தலைவர் கபீர் கலீல் தலைமையில் இடம்பெற்ற இந் சந்திப்பில் அமைப்பின் செயலாளர் எம்.அரூஸ் இஹ்லாஸ் மாவட்ட இணைப்பாளர் எல்.எம் சர்ஜுன்,பிரதேச இணைப்பாளர் ஏ.சி பர்ஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் மாவட்டத்தில் அமுல்படுத்தப்படவிருக்கும் எதிர்கால அரச திட்டங்களில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வகிபாகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சவால்கள் போன்ற பல்வேறு விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.(05)

# நெல் சந்தைப்படுத்தல் சபையை திறந்து நாடகம் ஆடுகிறது அரசு

### கிளி. மாவட்ட கமக்கார அமைப்பு குற்றச்சாட்டு

விவசாயிகளிடம் நெல் இல்லாத நிலையில் நெல் சந்தைப்படுத்தல் சபையை திறந்து நாடகம் ஆடுகிறது ஆளும் தரப்பு.

கிளிநொச்சி மாவட்ட கமக்காரர் அமைப்புகளின் சம்மேளன தலைவர் சுப்பிரமணியம்ஜதீஸ்வரன்தெரிவிப்பு. நேற்றுகிளிநொச்சிஊடகஅமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில், அரசாங்கம் நெல்லை கொள்வனவு செய்யாத நிலையில் விவசாயிகள் தனியாருக்கு குறைந்த விலையில் நெல்லை விற்பனை செய்தனர். தற்போது நெல் கொள்வனவு செய்வதாக அரசாங்கம் நேற்று நெல் சந்தைப்படுத்தல் சபைகளின் களஞ்சியத்தை திறந்து. தேர்தலுக்காக நாடகமாடுவதாகதெரிவித்தார். (05-113)

# மனநலம் குன்றிய இரு பிள்ளைகள் கழுத்து வெட்டப்பட்டு சடமாக மீட்பு

### மருதமுனையில் சோகம்

பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்டமருதமுனைபாக்கியத்து சாலிஹாத் வீதியில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த முகம்மது கலீல் முஹம்மது றிகாஸ் (வயது 29), முகம்மது கலீல் பாத்திமா பஸ்மியா (வயது 18) ஆகிய மனநலம் குன்றிய இரு பிள்ளைகளும் நேற்று (வியாழக்கிழமை) காலை கழுத்து வெட்டப்பட்ட நிலையில் ஜனாஸாவாக மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

உயிரிழந்த பிள்ளைகளின் தாய் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் மரணமாகியிருந்தார். ஏனைய இரு சகோதரர்கள் வெளிநாட்டில் தொழில் புரிந்து வருகிறார்கள். இந்நிலையில் உயிரிழந்த பிள்ளைகளை பராமரித்து வந்தகுறித்தபிள்ளைகளின்தந்தையான முஹம்மது மீர்ஷா முகம்மது கலீல் (வயது 63) என்பவரே இந்த கொடூர சம்பவத்தை மேற்கொண்டுள்ளார் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் மருதமுனை பிரதேசத்தில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார்முன்னெடுத்துவருகின்றனர். (05)

# இயந்திரம்மூலம் நாற்று நடுகை பயிற்சியும் செயன்முறையும்



இயந்திரம் மூலம் நாற்று நடுகை பயிற்சியும் செயல்முறையும் பரந்தன் பண்ணாங்கண்டிபகுதியில்நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி



விவசாயதிணைக்களத்தின்ஏற்பாட்டில் கிளிநொச்சி கமக்கார அமைப்புகள் மற்றும் விவசாயிகள், கமநலசேவை திணைக்களத்தினர், விவசாய போதனா ஆசிரியர்கள்,விவசாயிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

கிளிநொச்சி'மாவட்ட, விவசாயப் பனிப்பாளர் இதன்போதுகூறுகையில் -

இயந்திரம் மூலம் நாற்று நடுகையின் பெறப்படுகின்ற ஓர் ஏக்கருக்கான விலைச்சல் 150 புசலாகவும் சாதாரணமாக வீச்சு விதைப்பில் 120 புசலாகவும் உள்ளதாகவும் நாற்றுநடுகையால் அதிகலவிலான விளைச்சலை பெற முடியும் எனவும் பயிர்செய்கையின்போது குறைந்த அலவிலான உரங்களையே பயன்படுத்துவதாகவும்விறைப்புக்கு ஏக்கர்ஒன்றுக்கு 7கிலோ நெல்போதுமானதாகவும் குறைந்த செலவில் அதிகளவிலான விளைச்சலை பெற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (05- 113)

காலைக்கதிர்
Kalaikkathir

# கலாநிதி கலாமணியின் 31 ஆம் நாள் நினைவாக மூன்று நூல்கள் வெளியீடு





இலக்கியப்பணியை ஆர்வத்தோடும் அர்ப்பணிப்போடும் செய்த கலாநிதி தம்பிஜயா கலாமணியின்வாழ்வும் பணியும்காலங்காலமாக போற்றப்படவேண்டும். கடந்த வாரம் மார்ச் 11இல் ஆசான் கலாமணியின் முதலாவது மாத நினைவாக அல்வாயில் உருவச்சிலையும், மூன்று நினைவு நூல்களும்வெளியாகின.

தமிழ் உலகிற்கு அவர் ஆற்றிய இலக்கிய, நாடகப்பணிவரலாற்றில் முக்கியமானது. தலைமுறை தலைமுறையாக செய்ய வேண்டிய நாடக வழி முறைகளையும், அதனால் கிடைக்கிற பிரதிபலன்கள்அனைத்துமக்களிடம்கிடைக்கவேண்டுமென்கிற ஆர்வம்தான் கலாநிதி தம்பிஜயா கலாமணியின் வாழ்நாள் சாதனையாக மிளிர்கிறது.

ஒரு புத்தகத்தை நாம் வாசிக்கும்போது நம்முடைய பொதுப்புத்தியில் அதுவரை தெரிந்த தகவல்கள், உண்மைகள், விழுமியங்கள், எல்லாவற்றைப் பற்றியும் கேள்விகள் உருவாகும். அப்படியே புத்தகத்தை வாசிக்கும்போது நமது அறிவுப்பரப்பு ஒரு பாரியளவு விசாலமாகும். இத்தகைய பண்புசால் தகைமையை தன் மாணாக்கரிடம் வளர்த்த பெருமை கலாமணி பேராசனுக்கு உரியதாகும்.

நாம் வாசிக்கும் நூல்களின் ஊடாக நம்முடைய வீடு, ஊர், மாவட்டம், மாநிலம், நாடு, இனம், மதம், சாதி, மொழி, இவையாவும் மறைந்து போகும். பிரபஞ்ச மனிதனாக உணரமுடியும். அதனைப் போல ஒரு புத்தகத்தை வாசிக்கும்போது நம்முடைய உணர்வுகள் கூர்மையடையும்.

முன்னுரைகளுக்கு எல்லாம் முன்னுரையாக விளங்கும் 'கலாநிதிகலாமணிஅணிந்துரைகள்'எனும்இந்தத்தொகுப்பானது நீண்ட காலமாக அவர் எழுதிய விஞ்ஞானபூர்வமான முன்னுரைகளின்தொகுப்புநூலாகும். பல்வேறுகாலகட்டங்களில் அமரர் கலாநிதி கலாமணி எழுதிய முன்னுரைகள் ஒரு நூலின்




உள்ளடக்கத்தை, தெளிவான பார்வையைவாசிக்கும்வாசகர்களுக்கு உத்வேகமூட்டியது. ஒரு நூலுக்கு பல நூறு புத்தகங்களிலிருந்து தரவுகள் எடுக்கப்பட்டாலும், ஆசிரியரின் கருத்தை அப்படியே சொல்லவேண்டும் என்பதில்தனிக்கவனம் செலுத்து முன்னுரை வரைவதில் அமரர் கலாநிதிகலாமணியின் எழுத்து வண்ணம் அழகானதாகும்.

அதனாலேயே நான் தொகுத்த 'கல்லறை மேலான காற்று'கவிதைத்தொகுதிக்கு முன்னுரை எழுத அவரிடம் வினவிய போது, இக் கவிதை தொகுதிக்கு முன்னுரை

ஒன்று அவசியம்தானா என்பது இன்னமும் வினாவாகவே என்னிடம் உள்ளது என ஆசான் கலாமணியின் வார்த்தைகள் இன்னமும் என் மன நினைவுகளில் பதிந்துள்ளது.

வடமராட்சியில் கடந்த 1987 'ஒப்பரேஷன் லிபரேஷன்' போது நடந்தேறிய கொடுமைகளின் கோரங்களையும் சிதைவுகளையும் முதலாவதாக ஆண்டு நினைவு கூர்வாகக் கொண்டு வெளியான கவிதை தொகுப்பே அந்நூலாகும்.

இப்படித் தான் எங்கள் இலக்கிய நட்பு முகிழ்ந்தது. காற்றுக் கூட அனலாக வீசிக்கொண்டிருந்த 1988 போர்க் காலகட்டம். அவ்வேளையிலும் விடியலை நோக்கிய எழுச்சியில் சண்டமாருதமாய் எழுந்து நின்ற இளங் கவிஞர்களின் படைப்பான

'கல்லறை மேலான காற்று' எனும் கவிதை தொகுப்பு வெளியாகியது.

இக்கவிதை தொகுதியின் முன்னுரையில் 'விமர்சனமாக அமையக் கூடாதென்பதனால் கவிதைகள் பற்றி தனித்தனியாகவே கருத்துக்கூறுதல் பொருத்தமன்று எனினும் இக்கவிதைகள் யாவுமே, இராணுவக் கொடுமைகள் எம்மிடம் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளன என்பதை வெளிக் காட்டும் ஓர்




பொதுப்பண்பைத் தம்மகத்தே எனக் கூறுதல்சாலப்பொருந்தும். வடமராட்சியில் நிகழ்ந்த கொடுமைகளைக் கூறும் வகையிலும் இதற்கு இடமுண்டு' என எழுதியுள்ளார் ஆசான் கலாமணி.

வடமராட்சியின் மூத்த விருட்சமாக என்றும் விளங்கும் கலாமணி ஆசான் படைத்த படைப்புக்கள் பல. அவற்றுள் அம்மாவின்உலகம், இலக்கியமும் உளவியலும், இளையோர் இசை நாடகம், ஏனிந்தத் தேவாசுர யுத்தம்,

காலநதியின் கற்குழிவு, ஜீவநதி நேர்காணல்கள் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

அல்வாய் மண்ணின் அகள்விளக்காக ஒளிவீசிய ஆசான் மண்வாசனை வீசும் எழுத்தை தன் உயிராக நேசித்தவர்.

அவர்என்றும்புதியதலைமுறைகளுக்கானவழிகாட்டியாய் இருப்பார். எவரின் எழுத்துக்கள் என்றும் உயிர்ப்பின் சுவாசமாகும்.

மண்வாசனை வீசும் படைப்புகளை வழங்கிய கலாநிதி அமரர் கலாமணி யாழ் பல்கலைக்கழக கல்வியியல்துறை ஆசானாக பணியாற்றியவர்.

கலாநிதி தம்பிஜயா கலாமணி யாழ்ப்பாணம், அல்வாயைச் சேர்ந்த பிரபல்யமான நாடகக் கலைஞரும் ஆவார்.

பேராதனை பல்கலைக்கழக பௌதிகவியற் பட்டதாரியன இவர், இயல், இசை, நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர். இயல் நாடகம், கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம் போன்ற பல துறைகளையும் கற்றுக் கலைப்பணி ஆற்றி வந்த கலாமணியின் முதலாவது மாத நினைவாக மூன்று நினைவு நூல்கள் வெளியாகிமை குறிப்பிடத் தக்கது.

(05)

# வறிய மாணவர்களுக்கு கற்றல் பொதி வழங்கல்



(கிண்ணியா நிருபர் )

வறுமை கோட்டின் கீழ் வாழும் ஏழை மாணவர்களுக்கான கற்றல் பொதிகள் கையளிக்கும் வைபவம் கிண்ணியா பூவரசந்தீவு அல் மினா மஹா வித்தியாலய வளாகத்தில் இடம்பெற்றது.

'கல்வித் தரத்தை மேம்படுத்த கற்றல் உபகரண பொதிகைகள்கையளிப்பு'என்னும்தொனிப்பொருளின் கீழ் இந்தக் கற்றல் உபகரணங்கள் சுமார் 73 மாணவர்களுக்கு கையளிக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் எம்.வை. ஹதியத்துல்லாஹ் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் கரோலின் மானுவல், கல்வித்திட்ட இணைப்பாளர் முஹம்மத் வஹி, வியாபார அபிவிருத்தி மற்றும் தொடர்பாடல் அதிகாரி நசீப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முஸ்லிம்எய்ட்நிறுவனத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்ட சுமார் 73 கற்றல் பொதிகளுடன் 2000 ரூபாபெறுமதியானகால்பாதணிகள் வாங்குவதற்காக வவுச்சரும் வழங்கி வைக்கப்பட்டன.(05)



# உணவு ஒவ்வாமையால் 9 மாணவர்கள் பாதிப்பு

பாடசாலையில் வழங்கப்பட்ட உணவுஒவ்வாமையால்பாதிக்கப்பட்ட 9 மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நமுனுகுல கனவரெல்ல பிரதேச பாடசாலை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட 3 மாணவிகளும் 6 மாணவர்களும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளநிலையில்இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகள் விசாரணைகளைமேற்கொண்டுள்ளன.(05)

# நெல் ஏற்றிச்சென்ற வாகனம் விபத்து

## ஒருவர் காயம்



வவுனியா, புளியங்குளம்பகுதியில் நெல் மூடைகளை ஏற்றிச்சென்ற வாகனம்விபத்திற்குள்ளானதில்ஒருவர் காயமடைந்துள்ளார்எனபுளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புதன்கிழமை மாலை இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் மேலும்



தெரியவருவதாவது -

முல்லைத்தீவிலிருந்து நெல் மூடைகளை ஏற்றிக்கொண்டு வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த கென்ரர் ரக வாகனம் புளியங்குளம் சந்திக்கு அண்மையில் சென்று கொண்டிருந்த போது வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளானது.

விபத்தில் வாகனத்தில் பயணித்த ஒருவர் காயமடைந்தார். வாகனத்தின் முன்சக்கரம் வெடித்ததில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விபத்து தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(05-100)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.03.2024இல் வெளியிடப்பெற்றது.